Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 111 சுபகிருது வருடம், கார்த்திகை மாதம் 08ஆம் திகதி வியாழக்கிழமை (24.11.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் ஆகிர் - 29, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60

நிதி மோசடியில் ஈடுபட்டு சிறைவாசம் அனுபவித்துவரும் திலினி பிரியமாலியை சிறைக்குள் சந்திக்க சென்ற பிரபல அரசியல்வாதி ஒருவர் தொடர்பில் இரகசிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவாம்.

இதற்கிடையில் பிரியமாலி டுபாயில் முதலீடுகளை செய்துள்ளதாக வெளிவந்த தகவல்களையடுத்து விசேட விசாரணைக் குழுவொன்று அங்கும் செல்லவுள்ளதாக தகவல்.






# ஆட்சிக் கவிழ்ப்புக்கு இடமளியேன்!

## பட்ஜெட் வாக்கெடுப்புக்கு பின் அனைத்து கட்சிகளின் கூட்டம்

## 13ஆவது திருத்தத்தைத் தாண்டிய தீர்வைப் பெற முயற்சிப்போம்

## எல்லோரும் என்னை ஹிட்லர் என அழைக்கின்றனர்

## போராட்டம் நடத்தினால் இராணுவத்தைக் கொண்டு ஒடுக்குவதாக ஜனாதிபதி ரணில் சபையில் அறிவிப்பு

நா.தினுஷா

அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் நேற்று அழைப்பு விடுத்தார். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு டிசம்பர் 11ஆம் திகதிக்குப் பின்னர் கலந்துரையாடல் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

02 பக்கம்



## இ.தொ.காவின் மூத்த தலைவர் சிவலிங்கம் காலமானார்

### இறுதிக்கிரியைகள் நுவரெலியாவில் இன்று


எஸ்.கணேசன், பீ.கேதீஸ்

மலையகத்தின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்...

02 பக்கம்

## சாணக்கிய தொழிற்சங்கவாதியை இழந்திருக்கிறது இ.தொ.கா. குடும்பம்

### ஜீவன் தொண்டமான் இரங்கல்



எஸ்.கணேசன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குடும்பம் ஒரு சாணக்கிய தொழிற்சங்கவாதியை இழந்துவிட்டது. முத்து சிவலிங்கத்தின் இழப்பு காங்கிரஸுக்கு மட்டுமல்ல.

02 பக்கம்

## அதிகாரப்பகிர்வுக்கு சபையில் விருப்பைக் கோரினார் ஜனாதிபதி

### தர்மசங்கடத்துக்குள்ளான கட்சித் தலைவர்கள்

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வாக அதிகாரப்பகிர்வு வழங்க சம்மதிப்பீர்களா என கட்சிகளிடம் நாடாளுமன்றத்தில் நேற்று நேரடியாக கேள்வி எழுப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

02 பக்கம்

## தமிழர்களை குறிவைத்து கொழும்பில் பொலிஸ் பதிவு

### மனோ எம்.பி. சபையில் ஆவேசம்

ம.சுசிகலா

கொழும்பில் தமிழர்களைக் குறிவைத்து பொலிஸ் பதிவுகள் இடம்பெறுவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டுவந்தபோதிலும் அவ்வாறான நடவடிக்கைகள் தொடர்வதாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற...

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...

69 இலட்சம் வாக்குகள் எடுத்த கோட்டாபய கூட இந்தளவு சண்டித்தனம் காட்டேல்ல...



## இந்தியாவுக்குப் பாதகமான சூழ்நிலை உருவாக்கப்படாது!

### அமைச்சர் சப்ரி திட்டவட்டம்

நமது விசேட செய்தியாளர்

இந்தியாவின் உணர்வுகளை மனதில் வைத்துச் செயற்படுவதாகவும் அந்நாட்டுக்கு விரும்பத்தகாத சூழ்நிலை உருவாக்கப்படாது என்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்...

02 பக்கம்

## குழந்தைகளை தாக்கும் புதிய வைரஸ்

கே.சுபானி

நாட்டில் தற்போது குழந்தைகளுக்கிடையே ஒருவகையான புதிய வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகவும், அதனால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினரான...

02 பக்கம்

## ஜனாதிபதியின் அழைப்புக்கமையவே வாக்கெடுப்பிலிருந்து விலகினோம்

### சுமந்திரன் எம்.பி. சபையில் விளக்கம்



நா.தினுஷா

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிர்த்து வாக்களிக்கவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருந்தது. ஆனால், கடந்த சில தினங்களாக தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

02 பக்கம்

## ஆசிரியைகளுக்கு சேலை கட்டாயம்

### விரைவில் சுற்றுநிருபம் வெளியாகும்

நாட்டிலுள்ள பாடசாலைகளில் ஆசிரியைகள் சேலையைத் தவிர வேறு ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு கடமைக்காக வர முடியாது என பொதுநிர்வாக அமைச்சு சுற்றறிக்கையை வெளியிடவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் சிலவற்றில் பணிபுரியும் ஆசிரியைகள் சேலைக்கு பதிலாக வேறு ஆடைகளை அணிந்து கடமைக்கு வருகை தந்துள்ளதாக தெரியவந்துள்ளதையடுத்து, இந்த சுற்றறிக்கை வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரியைகள் கடமை நிமித்தம் பாடசாலைகளுக்கு வரும்போது சேலை உடுத்தியே வரவேண்டும் எனவும்,

02 பக்கம்

## அதிக ஆபத்தில் இலங்கை

### ஜப்பான் முதலீட்டு வங்கி எச்சரிக்கை

நாணய நெருக்கடி தொடர்பில் அதிக ஆபத்தில் உள்ள ஏழு நாடுகளில் இலங்கை உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஜப்பானின் உயர்மட்ட தரகு மற்றும் முதலீட்டு வங்கியான நோமுரா ஹோல்டிங்ஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அந்த வங்கியானது எகிப்து, ருமேனியா, துருக்கி, செக் குடியரசு, பாகிஸ்தான் மற்றும் ஹங்கேரியுடன் இலங்கையையும் இணைத்துள்ளது. அந்நிய செலாவணி இருப்பு, நாணய மாற்று வீதம், நிதி இருப்பின் ஆரோக்கிய நிலைமை, வட்டி விகிதங்கள் உள்ளிட்ட 08 குறிகாட்டி களைக் கொண்டு நாணய நெருக்கடி இந்த வங்கியினால் மதிப்பிடப்பட்டுள்ளது.

## மாணவர்கள் நால்வருக்கு இடைக்காலத் தடை

### கைகலப்பு தொடர்பில் யாழ். பல்கலை நடவடிக்கை

யாழ்.செய்தியாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் மாணவர்களிடையே இடம்பெற்ற கைகலப்பு தொடர்பில் நான்கு மாணவர்களுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

## உணவு விநியோகஸ்தர்களுக்கு மேலதிகமாக ரூ.81 இலட்சம்

### அம்பலமானது சுகாதார அதிகாரிகளின் கவனயீனம்

கே.சுபானி

அங்கொடை தேசிய மனநல சுகாதார வைத்தியசாலை மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை ஆகியவற்றுக்கு சமைக்காத உணவை வழங்கும் இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு 2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் 8.14 மில்லியன் ரூபா...

02 பக்கம்

## பொலிஸாரின் அடாவடிக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

### பொலிஸ்மா அதிபருக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு காட்டமான கடிதம்

நா. தினுஷா

பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, பாணந்துறையிலிருந்து கொழும்பு வரை நடைப் பயணமாக வந்த இருவரை தடுத்து நிறுத்தி அவர்களை கைதுசெய்தமை மற்றும் பெண் பொலிஸ்...

02 பக்கம்

## ஆட்சிக் கவிழ்ப்புக்கு...

நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

வியட்நாமின் டீன் டீயம் மாதிரியான ஆட்சிக்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை என்றும், அவ்வாறு முயற்சி செய்தால் அதனைத் தடுப்பதற்கு இராணுவம் மற்றும் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்து நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையின் தொகுப்பு வருமாறு,

என்னை தற்போது ஹிட்லரைபோல் சித்திரிக்கின்றனர். நான் ஒரு சர்வாதிகாரி என்று அல்-ஜசிரா ஊடகம் விமர்சிக்கிறது. கட்டார் இராச்சியத்தின் ஜனநாயகவாதியைபோல் மாற வேண்டும் என்று கூறியது. என்னால் அப்படி இருக்க முடியாது. எமது முறைமையை இல்லாது செய்ய முயற்சித்தனர். நாடாளுமன்றத்தைக் கைப்பற்றியிருந்தால் அடுத்து என்ன நடந்திருக்கும்? அடுத்து உயர் நீதிமன்றத்திற்குச் சென்றிருப்பார்கள். இதற்குப் பின்னால் யார் இருக்கிறார்கள். குமார் குணரத்னத்துடன் முன்னிலை சோஷலிசக் கட்சி இருந்தது.

நாம் 21ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளோம். இதன் பின்னர் பெசில் ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று கூறினார்கள். காரணம், அவருக்கு இரட்டைக் குடியுரிமை இருப்பதாகக் கூறினார்கள். அதனை நாம் ஏற்றுக்கொள்வோம் என்றால் குமார் குணரத்னத்திற்கும் அவுஸ்திரேலியாவின் குடியுரிமை இருக்கிறது. பெசில் ராஜபக்ஷவை வர வேண்டாம் என்று விரட்டிவிட்டு, அவுஸ்திரேலிய குடியுரிமை உள்ள ஒருவருக்கு அதிகாரத்தை ஒப்படைக்க முயற்சிக்கிறார்கள். பெசில் ராஜபக்ஷவிற்கு எதிராக குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. நான் பிரதமராக இருந்தபோது அவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்தார். குமார் குணரத்னவிற்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. வடக்கு யுத்தத்தின்போது இந்தியாவின் அமைதி காக்கும் படையினரைக் கொன்றதாக அவர் மீது குற்றச்சாட்டுகள் உள்ளன. இதுதான் எமது விடுதலை என்று கூறுகிறார்கள்.

மே மற்றும் ஜூலை மாதங்களுக்கிடையில் என்ன நடந்தது. விகாரைகளையும் தீ வைப்பதாக அச்சுறுத்தினார்கள். மல்வத்து, அஸ்கிரி மகாநாயக்க தேரர்களை பேசக்கூடாது என்று அச்சுறுத்தினார்கள்.

மீண்டும் போராட்டம் நடத்தப்போவதாக கூறுகிறார்கள். யாருக்கும் எங்கும் கூட்டங்களை நடத்த முடியும். ஜே.வி.பி., கூட்டங்களை நடத்தியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் கூட்டங்களை நடத்தியது. பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அனுமதிபெற்று கூட்டங்களை நடத்துங்கள். வீதிகளில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துங்கள். நான் ஹிட்லரைபோன்ற சர்வாதிகாரி என்று கூச்சலிடுங்கள். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அனுமதியைப் பெற்று இவற்றை செய்யுங்கள். வீதியில் செல்லும் வாகனங்களுக்கு இடையூறு விளைவிக்காதீர்கள். வேறு ஒன்றையும் கேட்கவில்லை. ஆனால், நடந்ததைபோல் இன்னுமொரு போராட்டத்தை நடத்த முடியும் என்று நினைக்க வேண்டாம். அனுமதியின்றி வீதியில் செல்ல முயற்சித்தால் அதனைத் தடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவித்துள்ளோம். ஒவ்வொரு சட்டத்தரணிகள் நீதிமன்றத்திற்கு சென்று இதற்காக வாதிடுகின்றனர். அரசாங்கத்தை மாற்றுவதற்கு இன்னுமொரு போராட்டம் நடத்த முயற்சித்தால் நான் அதற்கு இடமளிக்கமாட்டேன். இராணுவம் பயன்படுத்தப்படும். அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்படும். கடந்த முறையைப் போன்று செய்ய இடமளிக்கப்படாது.

டீன் டீயம்களுக்கு இந்த நாட்டில் இடமில்லை. குமார் குணரத்னத்துடன் யார் இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கவேண்டும். குமார் குணரத்னத்தை நல்லவர் என்றால் பெசில் ராஜபக்ஷவிற்கு எதிராகவும் பேச முடியாது. அவர்கள் அனைத்து இடத்திலும் கதைத்தார்கள். ஆனால், மக்கள் இன்று அவர்களுடன் இல்லை. இதனை எந்த ஊடகங்கள் செய்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

வீடுகளுக்கு தீயிட்டதை ஊக்குவித்தது எந்த ஊடகம் என்பதைப் பார்க்க வேண்டும். இவற்றை விசாரணை செய்ய ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும். ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. பலர் சாட்சியமளித்தனர். நானும் வாக்குமூலம் வழங்கினேன். எனவே, வன்முறைச் சம்பவங்கள் குறித்து ஆராயவும் ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும். இவற்றை நாம் பாதுகாக்க வேண்டும்.

21ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. குழுக்கள் நியமிக்கப்பட்டன. தேர்தல் செலவுகளைக் குறைக்கும் சட்டதிருத்தம் கொண்டுவரப்படுகிறது. இன்னும் பல விடயங்கள் இருக்கின்றன. இந்தக் குழுக்களுக்கு இளைஞர் ஐவரை நியமிப்பதற்கான அளவுகோல்களை தீர்மானிக்குமாறு ஆளும், எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொள்கின்றேன். நான் நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதில்லை. இந்நாட்டின் பொருளாதாரத்தில் மிகப்பெரிய பிரச்சினை இருக்கிறது. இதனை தீர்த்துக்கொண்ட பின்னர் எதையும் செய்ய முடியும். நாட்டில் 13ஆவது திருத்தத்தை தாண்டிய தீர்வைப் பெற முயற்சிப்போம் - என்றார்.

## தமிழர்களை..

உறுப்பினருமான மனோ கணேசன் சபையில் நேற்று (23) ஆவேசமாக கருத்துரைத்தார்.

வரவு-செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர், மக்களுடன் களத்தில் நின்று செயற்படுவதால் பொலிஸ் பதிவின் பாரதூரத்தை நன்கு அறிந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மனோ எம்.பி. அங்கு உரை நிகழ்த்துகையில்,

தேர்தல் காலங்களில் வீடு, வீடாகச் சென்று நாம் வாக்கு கேட்பதுபோல் கொழும்பில் பொலிஸ் பதிவுகள் இடம்பெறுகின்றன. அதிலும் குறிப்பாக, தமிழ் மக்கள் இலக்குவைக்கப்படுகின்றனர். இது எந்த வகையில் நியாயம்? பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டதாகக் கூறி தற்போது இவ்வாறான பதிவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதன் காரணம் என்ன? இது குறித்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் பதிவு தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும் தமிழ் மக்கள் மாத்திரம் இலக்கு வைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் கூறினார்.

அவரது பதிலுக்குப் பிறகு இருவருக்கு மிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்றது. இங்கே, இவ்வாறு பேசினாலும் களத்துக்குச் சென்று பார்வையிட்டு அதன்பின்னர் பதிலளியுங்கள் என அமைச்சரிடம் மனோ கணேசன் கோரிக்கை விடுத்தார்.

ஏற்கனவே இந்தக் கேள்விக்குப் பதிலளித்ததாகவும் இனி தகவல்களை மீண்டும் ஆராய்வதாகவும் அமைச்சர் டிரான் அலஸ் இதன்போது தெரிவித்தார்.



லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகல தோட்டத்தின் அப்பர்கிரான்லி பிரிவிலுள்ள தோட்ட லயன் தொடர் குடியிருப்பொன்றில் நேற்றுமுன்தினம் மாலை (22) ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் குடியிருப்பொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இந்த தீ விபத்தில் குடியிருப்பிலிருந்த அனைத்து பொருட்களும் முற்றாக எரிந்து நாசமாகின. இத்தீயினால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும், குறித்த குடியிருப்பில் வசித்த 8 பேர் தற்போது அத்தோட்டத்திலுள்ள பொது வாசிகசாலை கட்டடத்தில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (தலவாக்கலை நிருபர்)

## பொலிஸாரின்..

அதிகாரிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய சம்பவங்களில் அநீதி இடம்பெற்றுள்ளதாக தெரிவித்துள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இந்த நடைபயணத்தை தடுத்து நிறுத்தியமைக்கான காரணம் மற்றும் இந்த நடைபயணத்தை தடுத்து நிறுத்த யார் உத்தரவிட்டது, யார் இந்த உத்தரவை அவர்களுக்கு கொண்டுசென்றது, இதற்கு காரணமான அதிகாரி தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தமக்கு அறிவிக்குமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரியுள்ளது.

இதுதொடர்பில் அந்த ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பொலிஸாரின் ஒழுக்கமற்ற செயற்பாடுகள் குறித்து நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். அதுதொடர்பான ஆய்வுகளையும் முன்னெடுத்துள்ளோம்.

இரு பெண் பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்தபோது சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் அவர்களை முறையற்ற விதத்தில் தள்ளியமை எங்களுக்கு கிடைத்த வீடியோ ஆதாரங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று, சமாதானமான முறையில் முன்னெடுக்கப்பட்ட வீதி நடைபயணத்தில் கலந்துகொண்டவர்களை சட்டத்துக்கு முரணாக தடுத்துநிறுத்தி அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்விரு சம்பவங்கள் குறித்தும் நாங்கள் அதிக கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த இரு சம்பவங்கள் தொடர்பான வாக்குமூலங்களை ஆணைக்குழுவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக நவம்பர் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் களுத்துறை பொலிஸார் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் வழங்கிய வாக்குமூலத்துக்கமைய பின்வரும் தகவல்கள் அவசியமாக தேவைப்படுகின்றன.

இந்த நடைபயணத்தை தடுத்து நிறுத்தியமைக்கான காரணம் மற்றும் இந்த நடைபயணத்தை தடுத்துநிறுத்த யார் உத்தரவிட்டது, யார் இந்த உத்தரவை அவர்களுக்கு கொண்டுசென்றது, இதற்கு காரணமாக அதிகாரி தொடர்பில் பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து அறிந்துகொள்ள விரும்புகிறோம்.

பாணந்துறை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப்பான பிரதான பொலிஸ் பரிசோதகரும் சாட்சியளித்திருந்தார். இந்த நடைபயணத்தில் பங்குபற்றியவர்களை பாதுகாப்பதற்கு தவறியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க பிரதான பொலிஸ் பரிசோதகரால் முன்னெடுக்கப்படவில்லை.

அண்மைக்காலமாக பொலிஸாரின் தகாத நடத்தைகள், மக்களின் நம்பிக்கையை சீர்குலைத்துள்ளதுடன் நாட்டின் நலனையும் வேகமாக பாதிப்படையச் செய்துள்ளது.

எனவே, பொலிஸாரின் ஒழுக்கத்தைப் பேணுவதற்கு பொலிஸ் மா அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுடன், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும், நாட்டில் அமைதியை பேணவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குழந்தைகளை...

வைத்தியர் வாசன் இரட்ணசிங்கம் 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (23) தெரிவித்தார்.

இதுகுறித்து வைத்தியர் வாசன் இரட்ணசிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

நாடு தற்போது கொவிட்-19 தொற்று பாதிப்பிலிருந்து விடுபட்டு ஒரு சுமுகமான நிலையை எட்டியுள்ளது. இதற்கிடையே கடந்த மாதம் குரங்கம்மை தொற்றால் பாதிக்கப்பட்ட இருவர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இது மக்களிடையே ஒருவகையான அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. இதனையடுத்து டெங்கு நோய் பரவலும் அதிகரித்துள்ளது. கடந்த ஜூலை மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தற்போது ஒருவகையான வைரஸ் காய்ச்சல் பரவி வருகின்றது. வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளது.

இந்த வைரஸ் பாதிப்புள்ள குழந்தைகளுக்கு இருமல், சளி, தொண்டை அலர்ச்சி, தொண்டை நோவு, தடிமன், மூக்கடைப்பு, காய்ச்சல், சுவாசப்பாதை கோளாறு போன்ற அறிகுறிகளைக் காணக்கூடியதாக இருக்கும்.

இவ்வாறான அறிகுறிகள் தென்படும்போது குழந்தைகளுக்கு பெரசிட்டமோல்ட் பருகக் கொடுக்கலாம். காய்ச்சல் தொடர்ந்து இரண்டு நாட்களுக்கு மேல் காணப்படுமாயின், வைத்திய ஆலோசனை பெறுவது அவசியமாகும். அத்தோடு, காய்ச்சல் அறிகுறிகளுடன் இருக்கும் குழந்தைகளிடமிருந்து ஏனைய குழந்தைகளை விலகியிருக்கச் செய்தல் நல்லது - என்றார்.

## ஜனாதிபதியின்...

அதன் காரணமாகவே, வரவு-செலவுத்திட்டம் மீதான இரண்டாம் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று (23) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாமல் தவிர்த்திருந்தோம்.

வரவு -செலவுத்திட்டத்திலுள்ள பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டியிருந்தோம். அதற்கு எதிராகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவருமே உரையாற்றியிருந்தோம். அப்படியானதொரு சந்தர்ப்பத்தில் வரவு-செலவுத்திட்டத்துக்கு நாங்கள் எதிராகவே வாக்களித்திருக்க வேண்டும். வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பை தவிர்த்தமைக்கு முதல் காரணம், தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஜனாதிபதி விருப்பம் தெரிவித்துள்ளார். தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி தொடர்ச்சியாக விருப்பம் தெரிவித்து வருகிறார். இதுதொடர்பில் கலந்துரையாடுவதற்கு தமிழ்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பு தொடர்பில் எங்களுக்கு நம்பிக்கை இல்லாவிட்டாலும் கூட, அழைப்பொன்று விடுக்கப்படும்போது நல்லெண்ண சமிக்ஞையாக நாங்களும் செயற்பட வேண்டும் என்பதற்காகவே எதிர்த்து வாக்களிக்காமல் ஒதுங்கியிருந்தோம்.

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான விவகாரம் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. காணாமலாக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் விசாரணை வெய்யவேண்டியதே காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தின் கடமையாக அமைந்துள்ளது. காணாமலாக்கப்பட்டோரின குடும்பங்களுக்காக கடந்த காலங்களில் நிவாரணமும் வழங்கப்பட்டிருந்தது.

இதற்கு மாறாக காணாமல்போனவர்களுக்கு என்ன ஆனது என்ற கேள்விக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை. இதற்கான விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் என்றும் கோரினார்.

## சிரேஷ்ட தொழிற்சங்கவாதி...

முன்னாள் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம் தனது 79ஆவது வயதில் நேற்றுக் காலை (22) நுவரெலியாவில் தனது இல்லத்தில் காலமானார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூத்த உறுப்பினராகவும் முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாச, டி.பி.விஜேயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகிய ஐந்து ஜனாதிபதிகளுடனும் கடமையாற்றியவர்.

1994ஆம் ஆண்டுமுதல் 2010ஆம் ஆண்டுவரை நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட இவர், 2010ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் கடமையாற்றினார்.

முத்து சிவலிங்கம் 2015 நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக போட்டியிட்டு 45 ஆயிரத்து 352 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி பின்னர் நல்லாட்சி அரசாங்கத்தில் பொருளாதார அபிவிருத்தி, சிறு மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதி அமைச்சராகவும் பணியாற்றினார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24) நுவரெலியா பொது மயானத்தில் தகனம் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உணவு...

மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாக வருடாந்த கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு தனியார் நிறுவனங்களுக்கு மனநல சுகாதார நிறுவனம் I, II மற்றும் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை ஆகியவற்றுக்கு சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்குவதற்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக வருடாந்த கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையில் 1.32 மில்லியன் ரூபா அந்நிறுவனங்களின் முகாமைத்துவத்தினூடாக மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், எஞ்சிய மில்லியன்கணக்கான தொகையை மீளப்பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மேலதிக தொகையை மீளப்பெற்றுக்கொள்ள நியமிக்கப்பட்ட குழுவினர் அதனை கைவிட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்கள்...

திருநெல்வேலி கிழக்கு, கலாசாலை வீதியில் கடந்த 21ஆம் திகதி, திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட சிரேஷ்ட மாணவர்களுக்கும், புதுமுக மாணவர்களுக்குமிடையில் கைகலப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இச்சம்பவத்தின்போது சிரேஷ்ட மாணவர்களால் புதுமுக மாணவர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டையடுத்து பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமைவாக இடம்பெற்ற ஆரம்ப கட்ட விசாரணைகளில் சம்பந்தப்பட்ட மூன்று சிரேஷ்ட மாணவர்களுக்கும், ஒரு புதுமுக மாணவனுக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சுதந்திரமான விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அடையாளம் காணப்பட்ட நான்கு மாணவர்களையும் மறுஅறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பகுதிகளினுள்ளும் நுழைவதற்குத் தடை விதிக்கப்படுவதுடன், கல்வி மற்றும் பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

## ஆசிரியைகளுக்கு...

அதில் எந்த மாற்றமும் இல்லை எனவும் கல்வி அமைச்சுக் கொள்கை தீர்மானம் எடுத்துள்ளதாகவும் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து அரச நிறுவனங்களிலும் பெண்கள் பொருத்தமான ஆடைகளை அணிந்து பணிக்கு வரலாம் என வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை தன்னிச்சையாக மாற்றினால் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்,

ஆசிரியத் தொழிலிலுள்ள அனைத்து ஆசிரியைகளும், தங்கள் விருப்பத்திற்கேற்ப ஆடைகளை அணிந்து பாடசாலைகளுக்கு வர அனுமதிக்க வேண்டும் என்று தங்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. ஆண்கள் குழு ஒன்றுகூடி பெண்களின் ஆடைகள் குறித்து முடிவெடுப்பது நகைச்சுவையான விஷயம்.

பெண்கள் அரச அலுவலகங்களுக்கு பணிக்கு வரும்போது உரிய ஆடைகளை அணிந்து வரலாம் என சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளபோதிலும் அது ஆசிரியைகளுக்கு பொருந்தாது எனவும் கல்வி அமைச்சு இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே தெரிவித்துள்ளார்.

## சாணக்கிய...

மலையக மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும் - என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் முத்து சிவலிங்கம் மறைந்ததையொட்டி ஜீவன் தொண்டமான் நேற்று (23) வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

1994ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருளில் இருந்த மலையகத்திற்கு தன்னுடைய அமைச்சினூடாக மின்சாரத்தைப் பெற்றுக்கொடுத்து ஒளி தந்தவர் அமரர் முத்து சிவலிங்கம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூத்த தலைவரென சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா போற்றப்பட்டதன் பின் தற்போது மூத்த தலைவர் என்ற வரிசையில் முத்து சிவலிங்கம் ஐயாவும் இணைவார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 83 வருட அரசியல் மற்றும் தொழிற்சங்க வரலாற்றில் பல தசாப்த காலமாக தொழிற்சங்கம் மற்றும் அரசியல் வழிகாட்டியாக இருந்து இந்த மாபெரும் அமைப்பின் தலைவராகவும், போசகராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், மலையக மக்களின் பிரதி அமைச்சராகவும், பதவி வகித்து எம்மை வழிநடத்திய இந்த மூத்த தலைவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் மறைவுக்குப் பின் எனது தந்தை அமரர் ஆறுமுகன் தொண்டமானின் அரசியல் மற்றும் தொழிற்சங்க வழிகாட்டியாக இருந்தார் அவர். அவ்விருவரின் மறைவுக்குப் பின் என்னையும் வழிநடத்தினார் என்பதை மறந்துவிட முடியாது.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, இவரின் குடும்பத்தாருடன் துக்கத்தை பகிர்ந்து கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## அதிகாரப்பகிர்வுக்கு ...

அவர்களை தர்மசங்கடத்துக்கு ஆளாக்கினார்.

இறுதியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, அரச தரப்பான பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளின் சம்மதத்தைப் பெற்றுக்கொண்டதுடன், இது தொடர்பில் டிசம்பர் 12ஆம் திகதி ஒரு சந்திப்பை நடத்துவோம் எனவும் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், நாடாளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறித்து நேற்று சபையில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

ஜனாதிபதி தனது உரையில், தனக்கு முதலில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான எம்.ஏ.சுமந்திரன் ஜனாதிபதியின் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அழைப்பு தொடர்பிலும் அதில் காணப்பட வேண்டிய தீர்வு தொடர்பிலும் முன்வைத்த கருத்துகள் தொடர்பில் பதில் வழங்கினார்.

இதன்போது அவர், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியுமான லக்ஷ்மன் கிரியெல்லவைப் பார்த்து நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப்பகிர்வு வழங்க சம்மதிப்பீர்களா எனக் கேட்டார்.

இதற்கு லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. பதிலளிக்கையில், உங்கள் பாட்டனாரும் அதிகாரப்பகிர்வை வலியுறுத்தியவர். நானும் எப்போதும் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துபவன். நாம் எப்போதும் அதற்கு தடையாக இருந்ததில்லை. சில கட்சிகள்தான் அதற்கு தடை போட்டன, போடுகின்றன. இங்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருக்கின்றார். அவர் 13 பிளஸ் தீர்வு என்றார். இந்த அதிகாரப்பகிர்வுக்கு அவர் சம்மதமா என அவரிடமே கேட்போம் எனக்கூறிவிட்டு மஹிந்த ராஜபக்ஷவை பார்த்து அதிகாரப்பகிர்வு வழங்க நீங்கள் சம்மதமா? எனக் கேட்டார்.

இதற்கு மஹிந்த ராஜபக்ஷ ஆசனத்தில் அமர்ந்திருந்தவாறு சிரித்துக்கொண்டு சம்மதம் என்பதற்கு அறிகுறியாக தலையை அசைத்தார். ஆனால், அத்துடன் விடாத லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., தலையசைத்தால் மட்டும் போதாது, நாடாளுமன்றத்தில் எழுந்து நின்று கூற வேண்டும் என்றார். இதனையடுத்து உடனடியாக எழுந்த மஹிந்த ராஜபக்ஷ எனக்கு சம்மதம் என்றார்.

உடனடியாக பிரதமர் தினேஷ் குணவர்தன பக்கம் தனது கவனத்தை திருப்பிய லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., பிரதமர் இதற்கு சம்மதிக்கின்றாரா எனக் கேட்டார். ஆனால், எந்தப் பதிலும் கூறாது பிரதமர் தினேஷ் குணவர்தன சிரித்தவாறு அமர்ந்திருந்தார். பார்த்தீர்களா பிரதமர் எப்போதும் அதிகாரப்பகிர்வுக்கு எதிரானவர். அவர் சம்மதிக்க மாட்டார் என்றார்.

இதன்போது தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவர் மனோ கணேசனைப் பார்த்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, என்ன மனோ,அதிகாரப்பகிர்வுக்கு நீங்கள் சம்மதமா எனக் கேட்டார். ஆம் நாம் அதனை ஏற்றுக்கொள்கின்றோம் என மனோ கணேசன் பதிலளித்தார்.

அப்படியானால் சுமந்திரன் நீங்களும் சம்மதம் தானே என ஜனாதிபதி ரணில் கேட்டபோது, இது தொடர்பில் வரவு-செலவுத்திட்ட விவாதம் முடிந்த பின்னர் ஒரு திகதியை குறிப்பிட்டு கட்சித் தலைவர்களுடன் ஒரு சந்திப்பை நடத்தினால் நல்லது என சுமந்திரன் எம்.பி. கூறினார்.

இதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியினரைப் பார்த்து, அப்படியானால் நீங்கள் சம்மதம்தானே என மீண்டும் கேட்டபோது, ஒரு எம்.பி. அதனை தலைவர்தான் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

சரி அப்படியானால் இன்று (நேற்று) இந்த விவாதம் முடிவடைவதற்கு உங்கள் தலைவரின் முடிவை எனக்கு கேட்டு சொல்லுங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியபோது, எழுந்த மனோ கணேசன் எம்.பி. ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி அதிகாரப்பகிர்வுக்கு இணக்கம் என்பதனால்தான் நாம் அதில் அங்கம் வகிக்கின்றோம் எனக் கூறினார்.

நல்லது அப்படியானால் வரவு-செலவுத்திட்ட விவாதம் டிசம்பர் 8ஆம் திகதி முடிவடைந்த பின்னர் 12ஆம் திகதிக்குள் ஒரு சந்திப்பை நாம நடத்துவோம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த கேள்வியின்போது ஜே.வி.பி. சபையில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது,

## இந்தியாவுக்குப்...

அலி சப்ரி நேற்று (23) தெரிவித்துள்ளார்.

சீன உளவுக்கப்பல் இலங்கைக்கு வருகைதந்த விடயம் தொடர்பில் இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"இந்தியா, இலங்கை மற்றும் பிராந்தியத்துக்கு விரும்பத்தகாத சூழ்நிலைகள் உருவாக்கப் படாது. இந்தியாவின் உணர்வுகளை புரிந்துகொள்கிறோம்" என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்



தோற்றம்
20.07.1943

மறைவு
23.11.2022

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின்
முன்னாள் தலைவரும் போஷகருமான
அமரர் முத்து சிவலிங்கம் ஐயா
அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்
இ.தொ.கா. குடும்பம்


# புதிய கூட்டணியை அமைக்க கலந்துரையாடல்கள் ஆரம்பம்

## முன்னாள் ஜனாதிபதி மைத்ரி அறிவிப்பு

நா. தினுஷா

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் வலுப்படுத்திக்கொண்டு, தேவை ஏற்பட்டால் எதிர்காலத்தில் புதிய கூட்டணியொன்றை அமைக்க தீர்மானித்துள்ளோம். தற்போதும் அதுதொடர்பான கலந்துரையாடல்கள் நாடாளுமன்ற மட்டத்தில் இடம்பெற்று வருவதாக அந்தக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (23) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சுதந்திரக் கட்சி, வரவு-செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில் எதிராகவே வாக்களித்திருந்தது. அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் நட்டமடையும் நிறுவனங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நட்டமடையும் நிறுவனங்களை நாட்டுக்கு பாரமாகவே நாங்கள் கருதுகிறோம். இருந்தபோதும் ரெலிகொம் போன்ற அதிக இலாபம் பெறும் நிறுவனங்களை மறுசீரமைப்புக்கு உட்படுத்துவதை பாரிய தவறாகவே எண்ணுகிறோம்.

அதேபோன்று, விவசாயிகளின் உரப் பிரச்சினை, எரிபொருள் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பு செய்தல், காணிகளை பகிர்ந்தளித்தல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களின் அடிப்படையிலேயே இதற்கு எதிராக வாக்களித்திருந்தோம். திறந்த பொருளாதாரத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், திறந்த பொருளாதாரம் எமது நாட்டில் தவறாக கையாளப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே தேசிய தொழிற்துறைகள் வீழ்ச்சியை சந்தித்துள்ளன.

அதேபோன்று தற்போது நாட்டிலிருக்கும் பொருளாதார, அரசியல் நெருக்கடிகளின் மத்தியில் நிறுவனங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளினால் எதிர்காலத்தில் நாட்டின் பொருளாதாரம் எந்தளவுக்கு வீழ்ச்சியடையும் என்பதை கூறமுடியாததொரு நிலை ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மேலும் வலுப்படுத்திக்கொண்டு, தேவை ஏற்பட்டால் எதிர்காலத்தில் புதிய கூட்டணியொன்றையும் அமைக்க தீர்மானித்துள்ளோம். தற்போதும் அதுதொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. எனவே, உற்பத்தி பொருளாதாரத்தைக்கொண்ட இடதுசாரிகளின் திட்டங்களைக்கொண்ட அரசாங்கமொன்றை அமைக்கவே எதிர்பார்க்கிறோம். உற்பத்திப் பொருளாதாரமே எங்களின் கொள்கையாக இருககும். அதுபோன்று, சர்வதேச தொடர்புகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும். அது மிகவும் அவசியமாகவுள்ளது. அதற்கான திட்டங்களையும் வகுத்து வருகிறோம்.

எதிர்த்தரப்பிலுள்ள சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து கைச்சாத்திட்டு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துமாறு ஆணைக்குழுவிடமும் அரசாங்கத்திடமும் கோரியுள்ளோம். கட்சி என்ற அடிப்படையில் தனிப்பட்ட ரீதியிலான விளக்கங்களையும் வழங்கியுள்ளோம். தேர்தல் என்பது பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியானது. காரணம், மக்கள் மத்தியில் இருக்கும் வைராக்கியம், குழப்பங்களை தீர்க்கவேண்டியது அவசியமாகும். அதற்கு சிறந்த தீர்வு தேர்தலாகும்.

சுதந்திரக் கட்சியில் இருந்துகொண்டு வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக ஆதரவளித்தவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். சந்திரிகா அதிகாரத்தை கைபற்றிக்கொள்ளலாம் என்று எங்களுக்கு எந்த பயமும் இல்லை. யாராக இருந்தாலும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்பட முடியும் - என்றார்.



வவுனியா, ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையில், இராணுவ முகாமிற்கு அருகேயுள்ள காணியை துப்புரவு செய்யும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஈச்சங்குளம் துயிலும் இல்லத்தினை அண்மித்த வளாகத்தில் சுடரேற்றி அஞ்சலி செலுத்திய பின்னர் மக்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(வவுனியா நிருபர்)

# கட்டுகஸ்தோட்டையில் நீர் விநியோகத் தடை

(பி.எம்.முக்தார்)

கண்டி, கட்டுகஸ்தோட்டை பாரிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அத்தியாவசிய திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் இன்று (24ஆம் திகதி) வியாழக்கிழமை மு.ப. 8 மணிமுதல் பி.ப. 2 மணி வரையிலான 6 மணிநேர நீர் விநியோகத் தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகுமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

கஹவத்த, தெலும்புகஹவத்த, உருகொட, கஹல்ல, வலனகல மற்றும் ஹிராகடுவ ஆகிய நீர்த்தேக்கங்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் நீர் விநியோகம் தடைப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இதுபற்றிய மேலதிக விவரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# மன்னார் நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நிறைவேற்றம்





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் நேற்று (23) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மன்னார் நகர சபையின் 57ஆவது அமர்வு நேற்று நகர சபையின் தலைவர் என்.அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது. இதன் போது 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட முன்மொழிவு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் நகர சபையில் 6 கட்சிகளை உள்ளடக்கிய 16 உறுப்பினர்கள் குறித்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவை ஏகமனதாக முன்மொழிந்து நிறைவேற்றினர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 16 உறுப்பினர்கள் அமர்வுக்கு வருகை தந்து 2023ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை முன்மொழிந்தனர்.

எதிர்வரும் ஆண்டிற்கான 223 மில்லியன் 4 இலட்சத்து 81 ஆயிரத்து 890 ரூபா மன்னார் நகர சபையின் வருடாந்த வருமானத்தைக் கணக்கில்கொண்டு நகர சபைக்கு உட்பட்ட வட்டார ரீதியாகவும் வட்டார உறுப்பினர்களின் பிரசன்னத்தோடு வட்டார சங்கங்களின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான அமைப்புகளுடன் கலந்து ஆலோசனையின் பேரில் குறித்த வரவு-செலவுத் திட்டம் மன்னார் நகரத்தின் அபிவிருத்தியை கருத்திற்கொண்டு முன்னெடுக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நஞ்சுகள், அபின் அபாயகரமான ஔடதங்கள் (திருத்தச்) சட்டம்

## நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்தது



நாடாளுமன்றத்தில் கடந்த 19ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள்(திருத்தச்) சட்டமூலம் நேற்றுமுதல் 2022ஆம் ஆண்டு 41ஆம் இலக்க நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டமாக நடைமுறைக்கு வருகிறது.

இதற்கான சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (23) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

நீதி, சிறைச்சாலைகள் விவகார மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினால் செப்டெம்பர் 09ஆம் திகதி நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டத்தின் ஊடாக நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் குறித்த சட்டம் திருத்தியமைக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின் திருத்தமானது, போதைப்பொருட்களை வைத்திருப்பது மற்றும் நாட்டுக்கு கொண்டுவரப்படுவதைத் தடுக்கும் வகையில் காலத்துக்கு ஏற்ற வகையில் சட்டத்தைப் புதுப்பித்து வலுப்படுத்தப் படவுள்ளது.

# அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ள விவசாயக் காணிகளை விடுவிப்பதன் மூலமே உற்பத்தியைப் பெருக்கும் அரசின் திட்டம் வெற்றிபெறும்

## ரிஷாட் எம்.பி. சபையில் தெரிவிப்பு



விவசாய உற்பத்திகளை பெருக்கவேண்டும் என்ற அரசின் திட்டத்திற்கு நேர்மாறாக விவசாயக் காணிகள் அரச இயந்திரங்களால் அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ளமை கவலை தருகின்றது எனவும் அந்தக் காணிகளை உடனடியாக விடுவித்து உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் (22) இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"எமது நாடு சுதந்திரமடைந்த பின்னர், ஆசியாக் கண்டத்தில் ஜப்பானுக்கு அடுத்ததாக இரண்டாவது அந்தஸ்தைப் பெற்றிருந்த நாடாகும். ஆனால், இன்று இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் ஆட்சிக்கதிரையில் அமர வேண்டும் என்பதற்காக மக்களை மடையர்களாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை நாசமடையச் செய்திருக்கின்றார்கள். அவர்கள் எடுத்த பிழையான முடிவுகளும், பிழையான செயற்பாடுகளுமே இதற்குக் காரணம். தங்களுடைய இருப்பை மாத்திரம் கருத்திற்கொண்ட அவர்கள், நாட்டைப் பற்றியும் நாட்டினது பொருளாதாரத்தைப் பற்றியும் சிந்திக்காத காரணத்தினால், நாடு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டு, இன்று உலகில் கரும்புள்ளியிட்டுப் பார்க்கப்படுகின்ற ஒரு நாடாக காணப்படுகின்றது. இவ்வாறானதொரு இக்கட்டான சூழலிலேயே இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஓமான் நாட்டில் தொழிலுக்காக சென்றவர்கள் படும் துயரங்களை நாம் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இந்த விடயம் தொடர்பில், அடிக்கடி என்னுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு முறையிடுகின்றார்கள். வேலைவாய்ப்புகளுக்காக ஓமான் சென்ற பெண்கள் விபச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகிறார்கள். நாட்டுக்கு மீண்டும் வர முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இது குறித்து கவனம் செலுத்தவேண்டிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு இருக்கின்றது. நாட்டுக்கு அதிகளவிலான அந்நியச் செலாவணியை பெற்றுத்தருகின்ற அந்தத் தொழிலாளர்களின் விடயத்தில், குறித்த நாட்டில் இருக்கின்ற தூதரகம் அக்கறை செலுத்த வேண்டும். அரசாங்கம் பாராமுகமாக இருக்காமல், அதற்கான பொறுப்பை ஏற்று, அவர்களை மீட்டு நாட்டுக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன், இதற்குப் பின்னால் இருக்கின்ற சக்திகளையும் அடையாளம் கண்டு, அவர்களுக்கு தண்டனை வழங்குவதன் ஊடாக எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுக்க முடியும்.

அதேபோன்று, அண்மையில் வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதியிடம் அரசுடைமையாக்கப்பட்டுள்ள விவசாய நிலங்கள் தொடர்பில் எடுத்துரைத்தோம். கடந்த இரண்டு வருடங்களாக இந்த உயர் சபையிலும் பல முறை இது குறித்து பேசி வருகின்றோம். அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அக்கரைப்பற்று, வட்டமடு உள்ளிட்ட இன்னோரன்ன பல பிரதேசங்களில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அரசுடைமையாக்கப்பட்டிருப்பதால், அவற்றை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்த காலத்தில், அவர்களுடைய விவசாய நிலங்களுக்கு செல்லமுடியாத காரணத்தினால், இன்று இவர்களுடைய சொந்தக் காணிகள் எல்லாம் அரச இயந்திரங்களுக்கு கீழ் கெசட் செய்யப்பட்டுள்ளன.

இதனால் விவசாயிகள் தமது தொழிலை செய்ய முடியாமல், மிகவும் மோசமான பொருளாதார நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இது குறித்து, நாங்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடமும் நாடாளுமன்ற ஆலோசனை சபை கூட்டத்திலும் இன்னும் பல சந்தர்ப்பங்களிலும் பலமுறை சுட்டிக்காட்டியும் அதற்கான தீர்வுகள் இதுவரை பெற்றுக்கொடுக்கப்படவில்லை. "விவசாய உற்பத்திகளைப் பெருக்க வேண்டும்" என்ற அரசின் திட்டத்திற்கு நேர்மாறாக, விவசாயக் காணிகள் அரச இயந்திரங்களால் அடாத்தாக பிடிக்கப்பட்டுள்ளமை கவலை தருகின்றது. அந்தக் காணிகளை உடனடியாக விடுவித்து, உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கின்றேன்.

மேலும், கைத்தொழிற்சாலைகள் மூடப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று, தனியார் துறையில் வேலை செய்பவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசியப் பொருட்களின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளபோதும், அவர்களுடைய சம்பளங்களில் எந்தவொரு மாற்றத்தையும் காண முடியவில்லை. அத்துடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான சுயதொழில் வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் சுயதொழிலை மேற்கொள்கின்றவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

இவ்வாறான ஒரு மோசமான நிலையிலேயே நாங்கள் இருந்துகொண்டிருக்கின்றோம். எனவே, எதிர்காலத்தில் வருகின்ற ஆட்சியாளர்கள் இனவாத, மதவாதங்களுக்கப்பால், நாட்டின் நலனுக்கான திட்டங்களை பொருளாதார நிபுணர்களின் மூலம், கொள்கை ரீதியாக வகுத்துச் செயற்பட வேண்டும். ஆட்சிக்கதிரைகள் மாறுகின்றபோதும் கொள்கைகளில் மாற்றம் செய்யாத ஒரு நல்ல நிலை ஏற்படவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்" - என்று கூறினார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2022, நவம்பர் 24ஆம் திகதி, வியாழக்கிழமை**

# பேச்சுக்கான ரணிலின் அழைப்பும் தமிழ்க்கட்சிகள் முன்னுள்ள சவால்களும்!

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்கில் மற்றுமொரு போராட்டத்தை நடத்துவதற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றியபோது இவ்வாறு குறிப்பிட்டுள்ள அவர், உரிய அனுமதிகளை பெற்று போராட்டத்தை நடத்துவதற்கு தாம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனினும், அனுமதியின்றி, வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் போராட்டங்களை நடத்துவதற்கு தான் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை என்று கூறிய அவர், அவ்வாறான போராட்டங்களை தடுத்து நிறுத்துவதற்கு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

போராட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு இராணுவத்தை ஈடுபடுத்தி, அவசரகால சட்டத்தை அமுல்படுத்தியேனும், போராட்டங்களை தடுத்து நிறுத்துவதாக கூறும் ரணில், போராட்டத்தின்போது, வீடுகளுக்குத் தீ வைக்க எந்த ஊடகம் முயற்சித்தது என்பது தொடர்பில் ஆராய்வதற்கு தான் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்தும் நோக்கில் நாடாளுமன்றத்தை ஒருபோதும் கலைக்கப் போவதில்லை எனவும் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய பிரச்சினை காணப்படுகின்ற இந்த தருணத்தில், நாடாளுமன்றம் கலைக்கப்படாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

அதிகாரப் பகிர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு பின்னர் அனைத்துக் கட்சி கூட்டத்தை ஏற்பாடு செய்ய எதிர்பார்த்துள்ளதாக கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பகிர்வை பெற்றுக்கொடுப்பதற்கு தான் தயார் எனவும் பகிரங்கமாகவே அறிவித்துள்ளார். பட்ஜெட் நிறைவேறிய கையோடு இந்த பேச்சுகள் நடக்கவுள்ள.

நாட்டை ஏழரை தசாப்த காலமாக உலுக்கும் இனப்பிரச்சினைக்கு அவ்வளவு விரைந்து சுமுகத் தீர்வு காண முடியும் என்று ஜனாதிபதி நம்புகின்றாரா என்று கேள்வி எழுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மந்திரத்தால் மாங்காய் பறிப்பது குறித்துப் பேசுகின்றாரா என்று சந்தேகமும் எழாமல் இல்லை. ஆயினும், அவரின் கூற்றுக்குள் இறங்க முன்னர் அவரின் சொல்லாடலின் அர்த்தத்தை நாம் புரிந்து கொள்வது அவசியம்.

பெரும்பாலும் 2024ஆம் ஆண்டு முற்பகுதியில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மேலும் 5 ஆண்டு காலம் தனது பதவியை உறுதிப்படுத்த ரணில் திட்டமிட்டிருக்கின்றார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு சுமுகமான ஓர் அரசியல் தீர்வைக் கண்டேன் என்ற பெயரோடு அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளலாம் என்று கனவு காண்கிறார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. நல்லது. அவர் காணும் கனவு நனவாகுமா என்பதுதான் இப்போது நம் முன்னுள்ள கேள்வி.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு ஜனநாயக ரீதியில், மக்கள் மத்தியில் அங்கீகாரம் இல்லை என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் மக்கள் மத்தியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவருடைய அரசாங்கத்துக்கும் செல்வாக்கு இல்லாத ஒரு சூழலில், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இல்லை என்ற சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீள்வதற்கு தேவைப்படுகின்ற நிதி உதவிகள் எந்தளவு தூரத்துக்கு இலங்கைக்கு வழங்கப்படும் என்பது கேள்விக்குறி.

அந்த அடிப்படையில், தன்னுடைய ஆட்சிக்கு அனைவரும் ஒத்துழைக்கிறார்கள், தன்னுடன் பேசுவதற்கு தயாராக இருக்கிறார்கள், இந்த ஆட்சியை அனைவரும் அங்கீகரிக்கிறார்கள் என்று சர்வதேச சமூகத்துக்கு காட்டவேண்டிய ஓர் இக்கட்டான நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார். அந்த பின்னணியில்தான் தமிழர்களுடன் பேசுவது என்ற ஜனாதிபதியின் அழைப்பு வந்திருக்கிறது. தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு, இனப்பிரச்சினைக்கு தீர்வு என்ற அடிப்படையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தாலும் அதன் உண்மையான நோக்கம், பேச்சுவார்த்தை மேசையில் தமிழ் தரப்புகள் தன்னுடைய அரசாங்கத்துக்கு ஓர் அங்கீகாரத்தை வழங்கி, அதனூடாக தமிழ்த் தரப்புகளுடன் தாங்கள் (அரசாங்கம்) பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறோம் என்ற செய்தியை நிதி உதவிகளை வழங்கவுள்ள நாடுகளுக்கு காட்டுவது மாத்திரமே.

எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பை ஏற்று தமிழ்த் தரப்புகள் அந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டாலே போதும். அதுவே அரசாங்கத்துக்கு அங்கீகாரத்தை கொடுத்ததாகவே அமையும் என்ற நம்பிக்கையில் தான் நேற்றைய அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

எவ்வாறாயினும், எந்த உத்தரவாதமும் இல்லாமல், தமிழ் தரப்புகள் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வது என்பது, நிபந்தனையில்லாத ஆதரவை வழங்கி, ரணிலுக்கு ஓர் அங்கீகாரத்தை வழங்கினால், நெருக்கடியில் இருக்கும் இலங்கையை சர்வதேச உதவிகளுடன் காப்பாற்றிவிட்டு, இறுதியில் தமிழ் மக்களுக்கு எதுவுமே இல்லாமல் நடுத்தெருவில் விடுகின்ற ஒரு செயலாகவே முடியும். பேச்சுவார்த்தை மேசையில் அமருவதாக இருந்தால் தமிழர் அங்கீகாரத்துக்குரிய ஒரு தீர்வுக்கு தாங்கள் ஒத்துழைக்கத் தயார் என தென்னிலங்கைக்கும் தமிழ் தேசத்துக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவாதம் வழங்க வேண்டும். அதனை தமிழ் அரசியல் கட்சிகள் வலியுறுத்த வேண்டும். எந்தவித உத்தரவாதமும் இல்லாமல் சென்று ஏமாந்த வரலாறு தமிழ்ச் சமூகத்திற்கு மீண்டும் ஏற்பட்டுவிடக்கூடாது.

# இ.தொ.கா. முத்துக்களில் ஒன்றாகத் திகழ்ந்த தலைவர் முத்து சிவலிங்கம்



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான முத்து சிவலிங்கம் நேற்றுக் காலை (23.11.2022) எம்மை விட்டும் இவ்வுலகைவிட்டும் பிரிந்துள்ளார்.

உலகில் பிறந்த மனிதர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு விதமான நோக்கங்களைக் கொண்டு வாழ்வதுண்டு. இவ்வுலகில் பிறந்த அனைவருக்கும் இறப்பு என்பது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகும். சிலரது இறப்பை நாம் ஒரு சம்பவமாகவே கருதுகின்றோம். ஆனால், சிலரது இறப்பு எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி விடுகின்றது. இந்த வகையில் அமரரின் மறைவு எம்மையும் எமது மக்களையும் மிகவும் ஆழ்ந்த வேதனைக்குள்ளாக்கிவிட்டது. சிறந்த ஒரு தலைவனை நாமும் இந்த சமூகமும் இழந்து நிற்கின்றோம்.

மலையக மக்கள் சேவையில் முதன்முதலாக தமது வாழ்வை ஒரு தொழிற்சங்கவாதியாகவே ஆரம்பித்தார். 1943.07.20ஆம் திகதி உடபுசல்லாவயிலுள்ள மேத் தோட்டத்தில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை உடபுசல்லாவ ரப்பானை தமிழ் வித்தியாலயத்திலும் பின்னர் உயர் கல்வியை நுவரெலியா புனித திரித்துவக் கல்லூரியிலும் பயின்றவராவார். கல்வியை முடித்துவிட்டு தந்தையாரினதும் தாயாரினதும் அரவணைப்பிலிருந்து சிறிது காலம் தொழில் தேடி விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும் தறுவாயில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அழைப்பின் பேரில் 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி தலவாக்கலை இ.தொ.கா. காரியாலயத்தில் எழுதுவினைஞராக இணைந்தார்.

இவருடைய அறிவாற்றல், பேச்சுவன்மை, சமூகப்பற்று ஆகியவற்றைக் கண்டு அமரர் தொண்டமான் பெருமகிழ்ச்சியடைந்தார். இவரை ஊக்குவித்து தொழிற்சங்கப் பணிகளில் பெரு நம்பிக்கையோடு ஈடுபடுத்தி வந்தார். சாதாரண எழுதுவினைஞராக பதவியேற்ற இவர் தனது பெரு முயற்சியில் இரண்டு ஆண்டுகளில் பிரதிநிதியாகவும், மாநில தொழிலுறவு அதிகாரியாகவும் பதவி உயர்வு பெற்றார். அதே வேளையில் அன்றைய தொழிற்சங்க மேதைகளின் வழிகாட்டலாலும் படிப்படியாக தனது பதவிகளில் சிறந்து விளங்கினார். அப்போதைய நாட்களில் 42 ரூபா 50 சதத்தை மாத சம்பளமாக இ.தொ.கா. வழங்கியது.


இதே 1962ஆம் ஆண்டுகளில் தலவாக்கலை, கண்டி, கலகா போன்ற இடங்களில் எழுதுவினைஞராக கடமையாற்றியிருந்தார். 1964ஆம் ஆண்டில் ஹப்புத்தளை மாவட்ட பிரதிநிதியாக பதவி உயர்வைப் பெற்றார். 1965ஆம் ஆண்டு ஹப்புத்தளை, பண்டாரவளை ஆகிய இரு மாவட்டங்களுக்கும் மாவட்ட பிரதிநிதியாக கடமையாற்றினார்.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக பல போராட்டங்களை நடத்தி இவர் வெற்றி கண்டுள்ளார். அதேபோல் அரசியலில் பிரவேசித்த இவர் நாடாளுமன்ற உறுப்பினராக ஐந்து தடவைகள் தெரிவுசெய்யப்பட்டார். இ.தொ.கா. அரசுடன் இணைந்து பின்னர் அமைச்சரவை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். அதனை அடுத்து இவர் பிரதி அமைச்சராக பல அமைச்சுகளில் பல தடவைகளில் இடம்பெற்று வந்துள்ளார். தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டின் பல்வேறு அரசியல் பிரச்சினைகளாலும் பல கெடுபிடிகளாலும் பாதிப்புக்குள்ளாகி வந்த காலப்பகுதியில் தோட்ட நிர்வாகங்களின் ஏதேச்சாதிகாரப் போக்கு, ஒடுக்கு முறை, சலுகை மறுப்பு ஆகியவற்றிற்கு எதிராக அவ்வப்போது பாரிய போராட்டங்களை இணைந்து நடத்தி தொழிலாளர்களின் நல்ல நண்பனாக விளங்கினார்.

இவர் மக்கள் சேவையில் முழு மூச்சுடன் தன்னை அர்ப்பணித்து ஈடுபாடு கொள்ள இவரது தந்தையார் மற்றும் பெருந்தலைவர் அமரர் தொண்டமான் ஆகியோரின் வழிகாட்டல்களும் அறிவுரைகளும் உறுதுணையாக இருந்தன. இவரது தந்தையார் முத்தையா மேத் தோட்ட தலைவராக இருந்தவர்.

ஆங்கிலேய காலனித்துவ காலத்திலும் நாடு சுதந்திரமடைந்த பின்னரும் இவரது தந்தையார் இ.தொ.கா. தோட்டத் தலைவராக இருந்தவர். அஞ்சாநெஞ்சத்துடன் மலையக மக்கள் சேவையை மேற்கொண்டவர். இவரது அறிவுரைகளும் அனுபவ உரைகளும் வழிகாட்டுதல்களும் அமைச்சர் முத்து சிவலிங்கத்தை மென்மேலும் ஊக்குவித்து வந்தன.

பலம்பெரும் தொழிற்சங்கவாதியாகவும் முதிர்ச்சி பெற்ற அரசியல்வாதியாகவும் மலையகத்தின் மாபெரும் தலைவரராகவும் திகழ்ந்த அமரர்



சௌமியமூர்த்தி தொண்டமானின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான அமைச்சர் முத்து சிவலிங்கம் துரிதமாக தாம் வகித்த பதவிகளில் எல்லாம் உயர்வு பெற்று வந்துள்ளார். அதனால் மற்றவர்கள் கண்டு மலைக்கக்கூடிய அரும்பெரும் பொறுப்புகளை எல்லாம் அவர் அமைச்சர் முத்து சிவலிங்கத்திடம் ஒப்படைத்து வந்தார். இ.தொ.கா. தலைமைப் பீடத்தோடு முட்டிமோதி பலர் வெளியேறியுள்ளனர். இச்சமயத்தில் கட்சி வீழ்ச்சியடைந்து விடும் என பலர் எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், பல்வேறு பாதிப்புகளில் இருந்த இ.தொ.காவை சாதுரியமாக மீட்டு அதனை மென்மேலும் பலப்படுத்தியவர்களில் அமைச்சர் முத்து சிவலிங்கம் முதன்மை பெறுகின்றார். அமரர் தொண்டமானின் ஆசியால் 1966ஆம் ஆண்டு டில்லியில் சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்தில் மூன்று மாத தொழிற்சங்கப் பயிற்சியை பெற்றார். அதன் பின்னர் ஜெனிவா, ஜப்பான், சீனா, இந்தியா போன்ற கிட்டத்தட்ட 40 கடல் கடந்த நாடுகளில் நடைபெற்ற தொழிற்சங்கப் பயிற்சி நெறிகளிலும் மாநாடுகளிலும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

1989ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்து நுவரெலியா, மஸ்கெலியா ஆகிய தேர்தல் தொகுதிகளில் முதன்முறையாகப் போட்டியிட்டு 28,000 வாக்குகளைப் பெற்றார். விகிதாசார அடிப்படையில் நடந்த தேர்தல் என்பதால் காத்திருப்பு பட்டியலில் அவரது பெயர் இடம்பெற்றிருந்தது. 1991ஆம் ஆண்டு தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அமைச்சர் முத்து சிவலிங்கத்திற்கு நுவரெலியாவிலும், பதுளையில் சென்னனுக்கும் நாடாளுமன்றத்தில் இடம் கிடைத்திருந்தது. 1994ஆம் ஆண்டு நுவரெலியா-மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு 86,500 வாக்குகளை பெற்று முதலிடத்திற்குத் தெரிவானார்.

பதவி மோகத்தாலும் சுயநலத்தாலும் இ.தொ.கா. விருட்சத்தை ஆட்டி அசைக்க முற்பட்டவர்கள் தமது முயற்சிகள் பலிக்காமல் தாமாகவே வெளியேறிவிட்டனர். அதேவேளை வெளியேறி விட்டவர்களின் விஷமப் பிரசாரங்களை முறியடித்த பெருமை அமைச்சர் முத்து சிவலிங்கத்திற்கு உண்டு. 1997ஆம் ஆண்டு அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் காலத்தில் பெருந்தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் இருளில் சஞ்சரித்துக்கொண்டிருந்த வேளையில், அவர்களது இல்லங்களுக்கு ஒளியை பிரகாசிக்கச் செய்த அருமையும் பெருமையும் பிரதியமைச்சர் முத்து சிவலிங்கத்தையே சாரும். எனவே, பெருந்தோட்ட மக்கள் அவரை அன்று மட்டுமல்ல, இன்றும் கூட 'மின்சாரக் கண்ணா' என்று பாசத்தோடு அழைப்பது வழக்கம். இது அவருக்கு மகிழ்ச்சியை தரக்கூடிய விடயமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலையக மக்களுக்காக மாத்திரம் இவர் சேவையாற்றவில்லை. ஒரு அரசியல்வாதியாக இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் பணிபுரிந்து வந்திருக்கின்றார். தென்னிலங்கையிலும் கிழக்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் இனங்களுக்கிடையில் அரசியல் ரீதியாக நல்லுறவையும் பொருளாதார வர்த்தக தொடர்புகளையும் நிலை நிறுத்துவதற்கும் இவர் அயராது பாடுபட்டுள்ளார். இந்த மாகாணங்களில் வறுமைப்பட்டோரின் வாழ்வாதாரங்களை அதிகரிப்பதற்காகவும் பல திட்டங்களையும் ஆலோசனைகளையும் அவ்வப்போது முன்வைத்து வந்துள்ளார்.

அமரர் தொண்டமான் முழு நம்பிக்கையோடு எத்தனையோ பேரை தொழிற்சங்க ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உருவாக்கி உற்சாகமூட்டி வந்துள்ளார். இவர்களில் இறுதிவரை தமது விசுவாசத்தையும் நன்றிப் பெருக்கையும் காட்டி வந்தவர் அமரர் முத்து சிவலிங்கம் ஐயா ஆவார். இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்த முத்துக்களில் ஒன்றாக பெயருக்கேற்றாற்போல திகழ்ந்தவர் முத்து சிவலிங்கம்.

எனவே, அவரது இழப்பானது எமக்கும் மலையக மக்களுக்கும் பேரிழப்பாகும். அமரருக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் கண்ணீர் அஞ்சலிகள்.

**தேவதாஸ் சவரிமுத்து**
***சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்***
***இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்***

## நக்கல் நமசிவாயம்

**பேச்சுக்கு வாங்கோவெண்டு ரணில் ஐயா கூப்பிடுறார்..! எத்தின கட்சிகள் இரண்டா உடையப்போகுதோ..?**



## இன்றைய நாளில்...

**✱ 1639 – ஜெரிமையா ஹொரொக்ஸ் என்பவர் முதன்முதலாக வெள்ளிக்கோள் சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் செல்வதை அவதானித்தார்.**

**✱ 1859 – சார்ள்ஸ் டார்வின் 'உயிரினங்களின் தோற்றம்' என்ற நூலை வெளியிட்டார்.**

**✱ 1865 – கொழும்பு, கண்டி மாநகரசபைகள் அமைக்கப்பட்டன.**

**✱ 969 – சந்திரனுக்குச் சென்ற அப்பல்லோ-12 விண்கலம் 3 விண்வெளி வீரர்களுடன் பசிபிக் கடலில் பாதுகாப்பாக இறங்கியது.**

**✱ 1992 – யாழ்ப்பாணம், பலாலி வான்படைத் தளத்தின் கிழக்குப் பகுதி இராணுவ வேலி விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது.**

# சகல போக்குவரத்து சேவைகளும் ஒரே டிஜிட்டல் தளத்தின்கீழ் பயணிகளுக்கான வசதி உருவாக்கம்

## தேசிய பேரவையின் உப குழு அவதானம்

புகையிரதம், பஸ், பாடசாலை வாகன சேவை மற்றும் டக்சி சேவை போன்ற நாட்டிலுள்ள சகல போக்குவரத்து சேவைகளையும் ஒரே டிஜிட்டல் தளத்திற்குக் கொண்டுவருவதனூடாக









பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது குறித்து பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் அண்மையில் (21) கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

போக்குவரத்துத் துறையினர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டதுடன், போக்குவரத்துத் துறையில் தற்பொழுது காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு, வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் போன்றவற்றால் தமக்குக் கடுமையான சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாக இதில் கலந்துகொண்டிருந்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், பாடசாலை வான் உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட போக்குவரத்துத் துறையின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். குறிப்பாக, வாகன டயர் உள்ளிட்ட உதிரிப்பாகங்களின் விலை 300% அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன், வாகன உதிரிப்பாகங்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதால் பஸ், பாடசாலை வாகனங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட போக்குவரத்து சாதனங்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகவும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.


இதில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தி அவற்றையும் உள்ளடக்கிய முன்மொழிவுகள் குழுவினால் முன்வைக்கப்படும் என்றும் இந்நாட்டிலுள்ள சகல போக்குவரத்துத் துறைகளையும் ஒரே டிஜிட்டல் தளத்தில் கொண்டுவருவது பிரதான முன்மொழிவாக அமையும் என்றும் இந்த முன்மொழிவுகள் அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கை டிசம்பர் மாதம் தேசிய பேரவையிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் உப குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர்களான லசந்த அழகியவண்ணா, சிவநேசதுரை சந்திரகாந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத்தின் ஏற்பாட்டில் 41ஆவது வருட மீலாதுன் நபி விழா











(பேருவளை பி.எம்.முக்தார்)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை, சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜமாஅத் ஏற்பாட்டிலான முப்பெரும் விழா அல்-ஹமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம் ஜாபிர் ஹாஜியார் மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது. சீனன் கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார் நிகழ்வுக்கு தலைமை வகித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் அனுசரணையுடன் வருடாந்தம் நடத்திவரும் சீனன்கோட்டை குர்ஆன் மத்ரஸாக்களுக்கிடையிலான சன்மார்க்க போட்டிகளுடனான மீலாதுன் நபி விழா மற்றும் சீனன்கோட்டை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை, சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை), சீனன்கோட்டை ஆரம்ப பாடசாலை மற்றும் கல்லூரிகளில் இருந்து தேசிய பரீட்சைகளில் திறமை சித்தி பெற்றவர்கள், தேசிய ரீதியில் பல்வேறு துறைகளிலும் சாதனை படைத்த சீனன்கோட்டை மாணவ, மாணவிகள் 15ஆவது வருடமாகவும் இவ் விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு சீனன்கோட்டை பள்ளிச் சங்க உப தலைவரும் களுத்துறை நீதிமன்றத்தில் சட்டத்துறையில் 50 வருடங்களைப் பூர்த்தி செய்தவருமான சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஸீ.எம்.ஹம்ஸா, உப தலைவர் ஏ.ஆர்.எம்.சுலைமான் ஹாஜியார், பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம்.சிஹாப் ஹாஜியார், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் மற்றும் டாக்டர் பட்டம் பெற்ற சீனன்கோட்டையைச் சேர்ந்த டாக்டர் அல்தாப் பாரூக், (எம்பீபீஎஸ்), டாக்டர் மிஷ்கா நிஸ்வர் (எம்பீபீஎஸ்), டாக்டர் ஸலாமத் ஸம்ஹா ஜெஸீல் (எம்பீபீஎஸ்), டாக்டர் பர்வின் பாரூக் (பீயூஎம்எஸ்) ஆகியோரும் கௌரவிக்கப்படமை விசேட அம்சமாகும்.

புனித மக்கா மைதுல் பாஸிய்யிலிருந்து ஷாதுலிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் முஹம்மத் பின் அஜ்வாத் அல்-பாஸியினால் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்கத் தலைவருமான அல்-ஹாஜ் மர்ஜான் பழீல், சவுதி அரேபிய தூதரகத் தலைமை அதிகாரி கலாநிதி அஸ்ஸெய்யித் காலித் அல்-மக்கி ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், புத்தளம் விருதோடை அஸீஸிய்யா அரபுக் கல்லூரி ஸ்தாபகர் சங்கைக்குரிய அஸ்ஸெய்யித் அப்துல் அஸீஸ் மௌலானா, பலஸ்தீன நாட்டின் முன்னாள் இலங்கைத் தூதுவர் அல்ஹாஜ் பௌஸான் அன்வர், தரீக்காக்கள் உயர் கவுன்சில் தலைவர் அஸ்ஸெய்யித் நகீப் அலவி மௌலானா ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி அல்-ஹாஜ் முஹம்மத் இக்ராம் (அல் பாஸி) சிறப்புச் பேச்சாளராகவும் கலந்து கொண்டனர்.

வாலிபர் ஹழரா ஜமாஅத் தலைவர் பெறியியலாளர் இமாம் ஹஸன் முர்ஸி வரவேற்புரை நிகழ்த்தினார்.

மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.அம்ஜாத் சீனன் கோட்டை பள்ளிச் சங்கத்தின் சார்பில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அஷ்ஷெய்க் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) இணைச் செயலாளர் அரூஸ் அனஸ், இணைப் பொருளாளர் ஸபுவான் நயீம் உறுப்பினர் எம்.இஸட்.எம்.இஸ்ஸத் மற்றும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பொருளாளர் கலாநீதி அஸ்வர் அஸாஹிம், சீனன்கோட்டை ஜம்மியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட அதிபர் மௌலவி முஹம்மத் ராஸிக் (முஅய்யதி) கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவிகள் எம்.எம் ஸய்னுல்ஆப்தீன் (பஹ்ஜி) எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) உலமாக்கள், பாடசாலைகளின் அதிபர்கள், அரபுக் கல்லூரி மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களின் அதிபர்கள், அரசியல்வாதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இணைச் செயலாளர் முஹம்மத் முர்ஷித் நன்றியுரை நிகழ்த்தினார்.

குட்டிமலை ஜலாலீய்யா குர்ஆன் மத்ரஸா முதலாம் இடத்தைபங பெற்றதோடு அக்கரகொடை தாஜூல் மபாஹிரிய்யா குர்ஆன் மத்ரஸா இரண்டாம் இடத்தையும், கன்கானம்கொடை நூரானிய்யா மத்ரஸா முன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

சீனன்கோட்டை குர்ஆன் மதாரிஸின் கீழுள்ள மத்ரஸாக்களுக்கிடையில் சன்மார்க்க அறிவுப் போட்டி நிகழ்வுகள் அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலையிலும் சீனன்கோட்டை ஜம்மியத்துல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட பாஸிய்யா மண்டபத்திலும் நடைபெற்றது.

அல் குர்ஆன் மனனம், கிராஅத், கஸீதா, இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பற்றிய பேச்சு, தரீக்கா பற்றிய பேச்சு, கேள்வி பதில் உட்பட பல்வேறு போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

### 23.11.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 126 6 6 | 138 055 |
| கனேடியன் டொலர் | 156 5453 | 168 8262 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 4864 | 41 52 8 |
| யூரோ | 258 7774 | 274 1872 |
| ஜப்பான் யென் | 1 4254 | 1 5314 |
| சிங்கப்பூர் டொலர் | 15 0185 | 160 638 |
| ஸ்ரேலிங் பவுன் | 315 7506 | 332 3120 |
| சுவிஸ் பிரான்ங் | 264 4488 | 283 0038 |
| ஐ.அ.டொலர் | 25 8808 | 260 7214 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 853 016 |
| குவைட் | குவைட் தினார் | 0,068 5858 |
| ஓமான் | ஓமான் றியால் | 833 0 57 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 2086 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 6030 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 8516 |

# புதையல் தோண்டிய நால்வர் கைது





(அநுராதபுரம் செய்தியாளர்)

பதவிய பகுதியிலுள்ள தொல்பொருள் பெறுமதிமிக்க இடமொன்றில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த நான்கு பேரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைதுசெய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய பதவிய பொலிஸ் பிரிவின் பொக்கவெத்த பகுதியில் நேற்று நடத்திய சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களையும் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 41, 39, 37, 29 வயதுடைய பதவிய மற்றும் பிங்கிரிய பகுதிகளை வசிப்பிடமாகக்கொண்டவர்கள் என்பதும் சந்தேக நபர்களை விசேட அதிரடிப்படையினர் பதவிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர் என்பதும் தெரியவந்துள்ளது.




# சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் நோக்கிலான கலந்துரையாடல் யாழில்

(யாழ்.நிருபர்)

USAID நிறுவனத்தின் நிதி அனுசரணையில் சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் நோக்கிலான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனின் தலைமையில் நேற்று முன்தினம் (22) காலை 10 மணியளவில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

USAID நிறுவனத்தின் நிதி அனுசரணையில் உள்ளூர் உற்பத்தி முயற்சியாளர்களை தெரிவுசெய்து அவர்களுக்கான உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்கும் நோக்கில் இக்கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இக்கலந்துரையாடலில் யாழ். அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கும்போது,

"சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குதல், பயிற்சிகளை வழங்குதல், முயற்சியாளர்களின் தேவைகளை அறிந்து வளவாளர்கள் மற்றும் அனுசரணையாளர்களின் பங்களிப்புடன் செயலமர்வுகளை கூடுதலாக நடத்துவதன் ஊடாக வளப்படுத்தமுடியும்" என்றார்.

மேலும், இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர், Action unity lanka நிறுவன திட்ட இணைப்பாளர், Action unity lanka நிறைவேற்று அதிகாரி, மாவட்ட செயலக திணைக்கள அதிகாரிகள், USAID நிறுவனப் பிரதிநிதிகள், உள்ளூர் உற்பத்தியாளர்கள் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தார்கள்.



# செம்மணி நீரேந்து பிரதேசத்தை மேடாக்குவதனால் வயல்கள் பாதிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் செம்மணி பகுதியிலுள்ள நீரேந்து பிரதேசங்கள், கட்டட இடிபாடுகளைக்கொண்டு நிரப்பப்பட்டு வருகின்றன.

செம்மணி யாழ். வளைவு பகுதியைச் சூழவுள்ள நீரேந்து பகுதிகளாக உள்ள சதுப்பு நிலங்களை கற்கள், மண் மற்றும் கட்டட இடிபாடுகள் என்பவற்றை கொட்டி அப்பகுதியை மேடாக்கும் வேலைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நீரேந்து பிரதேசத்தை மேடாக்கும் நடவடிக்கையால் அயலிலுள்ள வயல்களில் நீர் தேங்கி நிற்பதனால் வயல்கள் அழிவடையும் நிலைமை காணப்படுகிறது.

ஏற்கனவே அப்பகுதிகளில் விஷமிகள் குப்பைகளையும், கழிவுகளையும் கொட்டி வருவதனால் சதுப்பு நிலப்பகுதிகள் பாதிக்கப்பட்டு சதுப்புநில தாவரங்கள் அழிவடைந்துவரும் நிலையில், தற்போது அப்பகுதிகளில் கற்கள், கட்டட இடிபாடுகளைக் கொட்டி வருவது சதுப்பு நிலங்களை முற்றாக அழிக்கும் செயற்பாடு என சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இது தொடர்பில் உரிய தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

குறித்த பகுதியில் தனியார் சிலர் கடைகளை நிறுவுவதற்காக அப்பகுதிகளை மேடாக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, குறித்த பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றினை நிறுவுவதற்கு தனியார் ஒருவர் முயற்சிகளை முன்னெடுத்தபோதிலும் அதற்கு சமூக மட்டத்தில் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# வல்லை பாலத்திலிருந்து தவறிவிழுந்த இளைஞன் சடலமாக மீட்பு!

(யாழ்.நிருபர்)



யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லை பாலத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இளைஞரொருவர் நீரேரியில் தவறி விழுந்து காணாமல்போயுள்ள நிலையில், நேற்று (23) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தூர் கலைமதி கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கரன் திலக்ஸன் (வயது 19) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அந்த இளைஞனும் அவரது நண்பர்கள் சிலரும் இணைந்து வல்லை பாலத்தில் நேற்று முன்தினம் (22) மாலை வேளையில் தூண்டில் போட்டு மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது இளைஞன் பாலத்திலிருந்து நீரேரிக்குள் தவறி விழுந்துள்ள நிலையில் இளைஞரைத் தேடும் பணியில் அச்சுவேலி பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து ஈடுபட்டனர்.

இந்நிலையில், நேற்று புதன்கிழமை கடற்படையினர் மற்றும் சுழியோடிகளால் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையில் கைகலப்பு

(யாழ்.நிருபர்)


யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு இடையில் நேற்று முன்தினம் (22) மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

முகாமைத்துவப் பீடத்திற்கு அண்மையிலுள்ள உணவகமொன்றில் நான்காம் வருட மாணவர்களுக்கும், முதலாம் வருட மாணவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிவடைந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளராக சிவராஜா நியமனம்

(மன்னார் நிருபர்)



மன்னார் மாவட்டத்திற்கான உதவித் தேர்தல் ஆணையாளராக வி.சிவராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமெல் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை (21) மதியம் மன்னார் மாவட்டத்திற்கான உதவித் தேர்தல் ஆணையாளராக கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கடந்த இரண்டு வருடங்களுக்கும் மேலாக சிவராஜா, மன்னார் மாவட்ட செயலகத்தில் உதவி மாவட்ட செயலாளராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் 7 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார், வெள்ளாங்குளம் பகுதியில் 7 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இரண்டு பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் (22) காலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் - யாழ். பிரதான வீதி வெள்ளங்குளம் வீதித் தடுப்பில் சந்தேகத்திற்கிடமான லொறி ஒன்றை மறித்து சோதனையிட்டதில் லொறியிலிருந்து சுமார் 24 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா அடங்கிய 12 பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன் போது வவுனியாவைச் சேர்ந்த 37 மற்றும் 45 வயதான இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் லொறியுடன் இலுப்பைக்கடவை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலுப்பைக்கடவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# தலைவர் முத்து சிவலிங்கத்தின் மறைவு பேரிழப்பு;

## இ.தொ.கா. உப தலைவர் பாரத் அருள்சாமி இரங்கல்

(எஸ்.கணேசன்)



இ.தொ.காவின் முன்னாள் தலைவர் முத்து சிவலிங்கம் மறைந்தமை இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு பாரிய இழப்பு என அக்கட்சியின் உப தலைவர் பாரத் அருள்சாமி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் இழப்பிற்கு பிறகு, முத்து சிவலிங்கத்தின் திடீர் மறைவு கவலையளிக்கின்றது. அவர் அரசியல் செயற்பாடுகளில் இருந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, தொழிலாளர் கல்வி மற்றும் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தார்.

இ.தொ.கா. முன்னாள் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் காலம் முதல் அமரர் முத்து சிவலிங்கம் பெருந்தோட்டத்துறைக்கு பல்வேறு முன்மாதிரியான சேவைகளை ஆற்றியிருந்தார். அவர் நாடாளுமன்றத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததோடு, பிரதியமைச்சராகவும் மக்களுக்கு சேவையாற்றியுள்ளார்.

இ.தொ.காவின் 83 வருடகால அரசியல் வளர்ச்சிக்கு அடித்தளமாக செயற்பட்டவர்களில் இவரும் ஒருவர். எம்மைப் போன்ற வளர்ந்து வரும் இளம் தலைமுறைக்கு எப்போதும் துணையாக நின்றவர்.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நுவரெலியாவில் சிங்கள மொழியில் மாத்திரம் அறிவிப்புப் பலகைகள்

(நுவரெலியா மேலதிக நிருபர்)




மத்திய மாகாணத்தின் முக்கிய நகரான நுவரெலியா இலங்கையில் பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தலமாக விளங்குகிறது. இங்கு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகள் ஏராளமாக வருகை தருகின்றனர். எனினும், நுவரெலியா பிரதான நகரில் நுவரெலியா - பதுளை வீதியில் சிங்கள மொழியில் மாத்திரம் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

நுவரெலியா தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தூரப் பிரதேசங்களில் இருந்து இயக்கப்படும் பஸ்கள் நுவரெலியா பிரதான பஸ் தரிப்பிடத்திற்குள்ளே நிறுத்தப்படாமல் நுவரெலியா - பதுளை பிரதான வீதியில் நிறுத்துவதற்கு தனியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சிங்கள மொழியில் மாத்திரம் அறிவிப்புப் பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக சிங்கள மொழி தெரியாதவர்களின் வாகனங்கள் நிறுத்தப்பட்டால் உடனடியாக போக்குவரத்து பொலிஸாரினால் அபராதம் விதிக்கப்பட்டு வருவதால் சாரதிகள் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, அரசின் மும்மொழிக் கொள்கைக்கு சம அந்தஸ்து வழங்கி மும்மொழிகளிலும் அறிவிப்புப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என உரிய அதிகாரிகளுக்கு பொதுமக்கள் மற்றும் சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




# எனது அரசியல் வாழ்வின் வழிகாட்டி முத்து சிவலிங்கம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. அனுதாபம்

(நுவரெலியா நிருபர்)

மலையகத்தின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரும் முன்னாள் இ.தொ.கா. தலைவரும் பிரதி அமைச்சரும் எனது அரசியலுக்கு வழிகாட்டியாக நின்று செயற்பட்டவருமான முத்து சிவலிங்கத்தின் மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கின்றேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அமரர் முத்து சிவலிங்கம் என்னை அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர். அதனை நான் என்றும் மறக்கமாட்டேன். அவர் எனக்கு பல்வேறு நிலைகளிலும் நின்று வழிகாட்டியாக செயற்பட்டவர். என்னுடைய இன்றைய இந்த அரசியல் வளர்ச்சிக்கு அவரும் ஒரு காரணகர்த்தா என்றால் அது மிகையாகாது. அவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் இருந்து ஓய்வு பெறுகின்றவரை அந்த அமைப்பிற்காக முழுமையாக நின்று உழைத்தவர். அந்த அமைப்பில், சாதாரண ஒரு உறுப்பினராக உள்வாங்கப்பட்டு பின்பு படிப்படியாக பல்வேறு பதவிகளுக்கு உயர்த்தப்பட்டு பின்பு நிதிச் செயலாளராக அதன் தலைவராக மிகவும் சிறப்பாக செயற்பட்ட ஒருவர்.



நான் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தலைமைத்துவம் வகிக்கின்ற நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் சீத்தா-எலிய சீதையம்மன் ஆலயத்தின் ஆயுள் காப்பாளராக செயற்பட்டு பல்வேறு சிக்கலான நிலையிலும் எங்களுடன் நின்று மிகவும் துணிச்சலாக செயற்பட்டவர்.

அவருடைய பிரிவானது அவருடைய குடும்பத்திற்கு மாத்திரமன்றி, இந்த முழு மலையக சமூகத்திற்குமே ஒரு பெரும் இழப்பாகும். அவர் உடபுஸ்ஸல்லாவ டலோஸ் தோட்டத்தில் பிறந்து உயர்ந்த நிலையை அடைந்தவர். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இ.போ.ச பஸ் ஊழியர்களை தாக்கிய இரண்டு பேர் கைது

(பலாங்கொடை மேலதிக நிருபர்)

பலாங்கொடை இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் இருவரை தாக்கிய சந்தேக நபர்கள் இருவரை பலாங்கொடை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பலாங்கொடை நகரில் இருந்து உடகந்தை வரை செல்லும் இ.போ.ச. பஸ் சாரதி மற்றும் நடத்துநர் மீது குடிபோதையில் வந்த சந்தேக நபர்கள் இருவரும் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் காயத்துக்குள்ளான ஊழியர்கள் இருவரும் பலாங்கொடை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ் ஊழியர்கள் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து குருபெவில பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர்கள் இருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# மாணவர்களுக்கு போதைப்பொருள் விற்பனை செய்த சந்தேக நபர் கைது

(கண்டி செய்தியாளர்)

கேகாலையில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை செய்த இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் (22) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கேகாலை நகரப் பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருளை விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில், கேகாலை லேக் வீதியில் வசிக்கும் 21 வயது இளைஞர் ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலையில் கேகாலை நகரப் பாடசாலை ஒன்றுக்கு அருகில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் 4 மாணவர்கள் ஒரு இளைஞனுடன் உரையாடியதையும் பாடசாலையின் பிரதான வாயில் வழியாக உட்செல்லாது பாடசாலை வேலி ஒன்றினுள் உட்புகுந்து அவர்கள் சென்றதையும் அவதானித்துள்ளனர்.

பொலிஸார் பாடசாலை நிர்வாகத்திற்கு இதனைத் தெரியப்படுத்தி ஆசிரியர் ஒருவரின் உதவியுடன் அந்த நான்கு மாணவர்களின் பாடசாலை பைகளையும் பரிசோதித்துள்ளனர். அப்போது ஒரு மாணவனின் பாடசாலை பையில் இருந்து 5 போதை மாத்திரைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, குறித்த மாணவர்களது பெற்றோர் அழைக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட விசாரணைகளின்போது அம்மாணவர்கள் நால்வரும் போதைப்பொருட்களை உட்கொண்டமை தெரிய வந்துள்ளது. இதனையடுத்து சந்தேக நபரான இளைஞனை கேகாலை நகரில் வைத்து பொலிஸார் கைது செய்து கேகாலை நீதவான் முன் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலங்கையில் இருந்து மேலும் 10 பேர் அகதிகளாக இராமேஸ்வரத்தில் தஞ்சம்







(மன்னார் நகர் நிருபர்)

நாட்டில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 10 இலங்கை தமிழர்கள் நேற்று (23) காலை தனுஷ்கோடியை அடுத்த முகுந்தராயர் சத்திரம் பகுதியை சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் உணவுப்பொருட்கள், அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர்.

இதனால் கடந்த மார்ச் மாதம் முதல் இலங்கையிலிருந்து 198 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றடைந்துள்ளனர்.

இந்நிலையில், இலங்கை வவுனியா மாவட்டம் கணேசபுரத்தை சேர்ந்த உதயசூரியன், அவரது மனைவி பரிமளம் மற்றும் அவரது நான்கு குழந்தைகள், வவுனியா மாவட்டம் பூவரசம்குளம் பகுதியை சேர்ந்த புவனேஸ்வரி மற்றும் அவரது மூன்று குழந்தைகள் என இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் இலங்கை மன்னாரில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (22) இரவு படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அருகே உள்ள முகுந்தராயர் சத்திரம் பகுதியில் நேற்று (23) காலை சென்றடைந்தனர்.

தகவலறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார் இலங்கை தமிழர்களை மீட்டு மண்டபம் மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த விசாரணையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் குழந்தைகளை வைத்துக் கொண்டு இலங்கையில் வாழ வழியில்லாததால் தமிழகத்திற்கு அகதிகளாக வந்ததாகத் தெரிவித்தனர்.

பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்திற்கு இலங்கையிலிருந்து சென்ற அகதிகளின் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## கல்வெவ சிறிதம்ம தேரருக்கு பிணை



அனைத்து பல்கலைக்கழக பிக்கு மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெவ சிறிதம்ம தேரருக்கு நேற்று (23) பிணை வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 89 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு, பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கொழும்பு மேலதிக நீதவான் மஹவத்தவினால் பிணை வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீர பிணைகளில் செல்ல உத்தரவிட்ட மேலதிக நீதவான், மாதாந்தம் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். மேலும், அவருக்கு வெளிநாட்டு பயணத்திற்கான தடையை விதித்த மேலதிக நீதவான், வழக்கு நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித விடயங்களையும் ஊடகங்களுக்கு தெரிவிக்கக் கூடாது எனவும் அறிவித்துள்ளார். மீண்டும் வன்முறைகளை தூண்டும் வகையில் செயற்படுவதாக முறைப்பாடு கிடைத்தால், பிணை உத்தரவு இரத்து செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என கொழும்பு மேலதிக நீதவான் இதன்போது அறிவித்துள்ளார்.

எமது வழிகாட்டி

# முத்து சிவலிங்கத்தின் மறைவு பேரிழப்பாகும்

### ராமேஷ்வரன் எம்.பி. இரங்கல்

(எஸ்.கணேசன்)



இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 83 வருட அரசியல் வளர்ச்சிக்கு அடித்தளமாக செயற்பட்ட முன்னாள் தலைவர் முத்து சிவலிங்கத்தின் இழப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு பாரிய ஒரு இழப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதிச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். அந்த செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மலையக மக்களின் உரிமைக்குரலாக ஒலித்த பெருந்தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பிறகு தலைவர் முத்து சிவலிங்கத்தின் திடீர் மறைவு இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கு வேதனையளிக்கின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் அவர் அரசியல் செயற்பாடுகளில் இருந்த காலகட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தை உட்பட மலையக மக்களுக்கு தேவையானவற்றை அறிந்து, மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து அனைத்து நடவடிக்கைகளையும் மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வந்தார்.

அதுமட்டுமில்லாமல், மலையகத்தில் பல தோட்டங்களுக்கு மின்சாரத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளார். எமது ஸ்தாபனத்தின் மூத்த தலைவர் என்ற ரீதியில் எமக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த அன்னாரின் இழப்பு எமக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் காலம் முதல் அமரர் முத்துசிவலிங்கம் பெருந்தோட்டத்துறைக்கு பல்வேறு முன்மாதிரியான சேவைகளை ஆற்றியுள்ளார். அவர் நாடாளுமன்றத்திலும் மலையக மக்களுக்காக குரல் எழுப்பியுள்ளதோடு, அமைச்சராகவும், பிரதியமைச்சராகவும் சேவையாற்றியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# தங்கப்பதக்கம் வென்ற பழங்குடிப் பிரஜைக்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் பாராட்டு





(கண்டி செய்தியாளர்)

47ஆவது தேசிய விளையாட்டு விழாவில் மரதன் ஓட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற ஹேனியாகல பழங்குடி குடும்பத்தைச் சேர்ந்த தலா வரிகயே ரத்னபாலவை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று அண்மையில் மஹியங்கனை ஆதிவாசிகள் கிராமத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹண திசாநாயக்கா கலந்துகொண்டார். மேற்படி மரதன் வீரருக்கு மாத்தளையைச் 'டயானா ட்ரேடிங் கம்பனி' என்ற நிறுவனம் மாதாந்தம் ரூபா 35,000 வீதம் ஒரு வருடத்திற்கு வழங்க முன்வந்துள்ளது. இராஜாங்க அமைச்சரால் அதன் முதல் மாதத்திற்கான காசோலை இதன்போது கையளிக்கப்பட்டது.

இவ்வைபவத்தில் தம்பானே பழங்குடி மக்கள் தலைவன் ஊருவரிகே வன்னியலத்தோ, 'டயானா ட்ரேடிங்' நிறுவன அதிகாரிகள், தெஹியத்தகண்டிய வலய கல்விப் பணிப்பாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் பழங்குடி மக்களின் கலை கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.







கண்டி மெதமகநுவர முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அகில இலங்கை சிவதொண்டர் பேரவை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள், கண்டி நகர வர்த்தகர்கள் மற்றும் பெருமளவிலான பக்தர்கள் கலந்துகொண்டனர். இதன்போது இடம்பெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம். (கண்டி செய்தியாளர்)





புத்தளத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 30ஆவது பேராளர் மாநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர்பீட உறுப்பினர்களின் பைஅத் (உறுதிமொழி) வழங்கும் நிகழ்வு கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை 'தாருஸ் ஸலாம்' தலைமையகத்தில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெற்ற உயர்பீடக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

## கன்னத்தோட்டை நூரிய்யாஹ்வின் பழைய மாணவர் ஒன்று கூடல்

எதிர்வரும் 2022.11.26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9:00 மணிமுதல் கன்னத்தோட்டை அல்குல்லிய்யதுன் நூரிய்யாஹ் அரபுக்கலாசாலையின் பழைய மாணவர்களின் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. எனவே, கலாபீடத்தில் கல்வி பயின்ற அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.





@rrhrs msL m fdq- Rnbh kL dch

@v dlkkqplot sdc l dch f dmbx hmRqhK m -

Key Responsibilities

- Nudqrdd lkkrnbh kl dch bbnt msr
- L m f d lkkoqnl nshnmr mc cudqshrdl dmsr
- Qduhdv m lkkshbr sn rrdrr rtbbdrr mc qplbnl l dmc hi oqnudl dmsr enqet st qpl cr
- Cdudlkno r sq sdf hdr sn hmbqpl r d enlknv dq gho mc dmf f dll dms
- Dmr t qpl lkkJOHr qpl bghdudc mc cdlkudq aldr qpl bnl okdsdc nmshi d
- Dmr t qmf cudqshrhmf b l o lf mr qpl r dbt qplc eqnl bkhdms mc dwdbt sdc gnklrshb lkkx

Candidate Profile

- 1 xd q qplkdu ms v nq dwoddqhdmbd
- Rnt mc mc t o sn c sd mnv kdcf d nmclfi hs k l q dshmf ok send r
- Cdl nmrsq sdc alkksx sn bnl l t mhb sd deedbshudkx & r sqnmf at r hmdrr r dmr d
- 
- Hhsdqplr sdc b mchc sdr b m ookx ax r dmchmf sgdhqBUr sn qplbqt lsl dmsabnmmdbsdc f l lkkbnl

Bnms bst r nm+83 665 260 023
+83 666 217 012-
ABnmmdbsdc (Ous) Ksc,
Mn9/6, R dlenmF qpdmr,
Bnlnl an-/4-

Ronqsr Neelbdq

Hhr sbst shnme9Cdo qpl dms neRonqsr Cdudlknol dms @ookx9Rdbqpls qx, L hmhrsqx neRonqsr mc nt sg @ee hqr, Mn9/8, Oglklo F t m v qpdm L v sg, Bnlnl an-/6-

l t mhnq @qs Chqplbsnq-

@v dlkkqplot sdc l dch f dmbx hmRqhK m -

Key Requirements.

- B mchc sd rgnt lc g ud mt mcdqrs mchmf ne bqpl shud cdr lf m& k xnt s, Rsqnmf r lkkr v lsg cdr lfi m r nesv qpl, mc g ud sgd alkksx sn at lkc bqpl shud mc t mlpt d hcd r-G uhmf sgd ekdwalkksx sn c os sn bkhdms dwodbs shnmr mc g ud sgd v lkkmf mdr r sn v nq v lsg shf gs cd ckhmdr hr l t rs-
- Hhsdqplr sdc b mchc sdr b m ookx ax r dmchmf sgdhqBUr sn qplbqt lsl dmsabnmmdbsdc f l lkkbnl

Bnms bst r nm+83 665 260 023
+83 666 217 012-
ABnmmdbsdc (Ous) Ksc
Mn9/6, R dlenmF qpdmr,
Bnlnl an-/4-

Ct sx Neelbdq

Bnl o mx9L lka mAhrbt lsL mt e bsnqplr (OUS) Ksc l na Oqnehld9@alkksx sn r t odqplhr d sgd r dbt qpsx odqrnmmdk hm sgd bnl o mx oqpll hr dr mc cqud snv qpr ydqn r dbt qpsx k or dr

Qualifications:
FBD@ Knq anud, @sld rs/4 xd q nedwoddqhdmbd hmr lhi lk qb o blsx-
@f d9Adlnv 4/ xd q
- @ookx9u b mblhdr l lka mahrbt ls-bnl

l o mdrd K mf t f d sq mrk snq

Key Requirements:
Elt dmshml o mdrd K mf t f d, Fq ct sdc hmqplot sdc Tmhudqrlsx, L hmlh t l ne/o xd qDwoddqhdmbd-
- @ookx9hmsc s bqpl sdq f l lkkbnl /66 23//2/2

Dwdbt shud - GQ & @cl hm

Bnl o mx9Kdf bx Gd lkgb qpl, Bnlnl an-/2- Pt lkelb shnmr 9L hmlh t l ne/1 xd q nedwoddqhdmbd, Chnlnl nqCdf qpld
@f d9Adlnv 14 xd q
- @ookx9bnlnl an kdf bxgd lkgklb-bnl

# குறிஞ்சாக்கேணி படகு விபத்து இடம்பெற்று ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு எதிர்ப்புப் பேரணி










(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா, குறிஞ்சாக்கேணி இயந்திரப் படகு பாதை கோர விபத்து ஏற்பட்டு நேற்றுடன் (23) ஒரு வருடமாகின்றது. நேற்று (23) ஏற்பட்ட இவ்விபத்தில் ஐந்து மாணவர்களும் மூன்று பொதுமக்களும் உள்ளடங்கலாக எட்டு அப்பாவி உயிர்கள் பலியாகின.

இந்தச் சம்பவத்தையடுத்து நேற்று (23) பெரிய கிண்ணியா ஆண்கள் பாடசாலையினால் எதிர்ப்புப் பேரணி ஒன்று இடம்பெற்றது. இப்பேரணி பாடசாலை முன்றலில் ஆரம்பித்து குறிஞ்சாக்கேணி பாலம் வரை சென்றடைந்தது. இப்பேரணியில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் கிண்ணியா பிரதேச செயலாளர் உட்பட வலயக்கல்விப் பணிப்பாளர் என சுமார் 500இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இப்பேரணியில் சென்றவர்கள் பால நிர்மாணப் பணியினை துரிதகதியில் செய்து தருவதோடு, இரு பகுதி மக்களினது போக்குவரத்தினை இலகுபடுத்தி தருமாறும் வேண்டிக்கொண்டனர். அத்துடன், மேலும் அப்பாவி உயிர்களை பலி கொடுக்க நாங்கள் தயாரில்லை என்றும் அவ்வாறான சம்பவம் ஒன்று இனிமேலும் ஏற்படக்கூடாது என்றும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டோர் தெரிவித்தனர். இக்கோரிக்கைகளை முன்வைத்து மகஜர் ஒன்றையும் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனியிடம் கையளித்தனர்.

இதேவேளை, கிண்ணியா பிரதேச செயலகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட உயிர் நீத்தவர்களுக்கான துஆ பிரார்த்தனையும் இனி அவ்வாறானதொரு நிகழ்வு ஏற்படக்கூடாது என்று துஆ பிரார்த்தனையும் செய்துகொண்டனர்.

இப்பிரார்த்தனையின்போது உயிர்நீத்தவர்களின் குடும்பங்கள், உலமா சபையினர், கிண்ணியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# கந்தளாயில் 85 இலட்சம் ரூபா பணம் மோசடி; நபர் ஒருவருக்கு எட்டு வருட சிறைத்தண்டனை

## எட்டு இலட்சம் ரூபா தண்டப்பணம்

(கந்தளாய் நிருபர்)

கந்தளாயில் 85 இலட்சம் ரூபா பணத்தை மோசடிசெய்த நபர் ஒருவருக்கு எட்டு வருட சிறைதண்டனையும், எட்டு இலட்சம் ரூபா தண்டப்பணமும் விதித்து கந்தளாய் நீதிமன்ற நீதிவான் நேற்று (23) உத்தரவிட்டார்.

கந்தளாய், லைட் வீதி, பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியான காலகட்டத்தில் டீசல் மற்றும் பெற்றோல் போன்ற எரிபொருள் பெற்றுத்தருவதாகக் கூறி பல பேரிடம் 85 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பணம் செலுத்தியவர்களினால் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், குறித்த நபருக்கெதிராக கந்தளாய் நீதிமன்றில் நடைபெற்றுவந்த வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டதால் நீதிவான் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

# ஜப்பான் அரசின் 91 இலட்சம் ரூபா நிதியில் சம்பூர் பெரியகுளம் புனரமைப்பு




(மூதூர் நிருபர்)

ஜப்பான் நாட்டு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் 'சமூக அடிப்படையிலான சிறு குள புனரமைப்பு' திட்டத்தின்கீழ் சம்பூர் பகுதியிலுள்ள பெரியகுளம் எனும் குளம் 91 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று (23) விவசாயிகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முதன்மை அதிதிகளாக இலங்கைக்கான ஜப்பான் தூதுவராலயத்தின் உதவிச் செயலாளர்கள் கலந்துகொண்டு குளத்தை விவசாயிகளின் பாவனைக்காக திறந்துவைத்தனர்.

இக்குளத்தை 'பீஸ் விண்ட்ஸ்' நிறுவனம் முன்னின்று சிறப்பாக புனரமைப்புச் செய்திருந்தது. இக்குளம் புனரமைப்புச் செய்யப்பட்டதன் மூலம் சம்பூர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது சம்பூர் கமநலசேவை நிலையப் பொறுப்பதிகாரி, மூதூர் பிரதேச செயலக உயரதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சித்தாண்டி பகுதியில் தீப்பற்றி எரிந்ததில் மூதாட்டி உயிரிழப்பு

(மீராவோடை நிருபர்)

கடும் குளிர் காரணமாக தீ மூட்டி குளிர்காய்ந்துகொண்டிருந்த வயோதிபப் பெண்ணொருவர் தீப்பரவி உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தாண்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சித்தாண்டி பகுதியைச் சேர்ந்த 78 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் சட்டி ஒன்றில் தேங்காய் மட்டைகளை கொண்டு தீ மூட்டி குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது அப்பெண்ணின் உடலில் தீ பரவியுள்ளது.

இவ்வாறு தீக்காயங்களுக்குள்ளான பெண் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சைபெற்றுவந்த நிலையிலேயே மரணமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 2024 உலகக்கிண்ணத் தொடரின் போட்டி வடிவமைப்பில் மாற்றம்


**9ஆவது** இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரை மேற்கிந்திய தீவுகள் மற்றும் அமெரிக்க நாடுகள் இணைந்து 2024ஆம் ஆண்டு நடத்துகிறது. முன்னைய இரு உலகக்கிண்ணப் போட்டிகள் முதல் சுற்று, அதன் பிறகு சுப்பர் 12 சுற்று, அரையிறுதி, இறுதிப்போட்டி என்ற முறையில் நடத்தப்பட்டன. ஆனால், அடுத்த இருபதுக்கு 20 உலகக்கிண்ணப் போட்டி வடிவமைப்பில் மாற்றம் செய்யப்படுகிறது.

இதில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. அவை 4 பிரிவாக பிரிக்கப்பட்டு லீக்கில் மோதுகின்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதலிரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும். சுப்பர் 8 சுற்றுக்கு வரும் 8 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மோதும். அதிலிருந்து 4 அணிகள் அரையிறுதிக்குத் தெரிவாகும்.

இந்தப் போட்டிக்கு ஏற்கனவே 12 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுவிட்டன. இதில் இலங்கை அணியும் தகுதிபெற்று விட்டது.

# வானவில்லுக்கு எதிர்ப்புத் தெரிவித்த கட்டார்

(ரமணி)



வேல்ஸ் ரசிகர்கள் அணிந்திருந்த வானவில் தொப்பிகளையும், சீருடைகளையும் காவலர்கள் அகற்றியதாக வேல்ஸ் உதைபந்தாட்ட கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. அமெரிக்காவுடனான போட்டிக்கு முன்னதாக LGBTQ+ சமூகத்துடன் ஒற்றுமையாக அணிந்திருந்த ரெயின்போ தொப்பிகளை அகற்றுமாறு ரசிகர்களிடம் கூறப்பட்டதற்கு வேல்ஸ் உதைபந்தாட்ட சங்கம் (FAW) எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. வானவில் சட்டை அணிந்ததற்காக மைதானத்தினுள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதாக அமெரிக்க பத்திரிகையாளர் கிராண்ட் வோல் கூறினார்.

"இப்போது பாதுகாப்புக் காவலர் என்னை மைதானத்திற்குள் அனுமதிக்க மறுக்கிறார்" என்று வோல் ட்விட்டரில் பதிவிட்டார். அவர் கிட்டத்தட்ட அரை மணிநேரம் காவலில் வைக்கப்பட்டதாகவும் ஒரு பாதுகாப்பு ஊழியர் அவரது கைகளிலிருந்து தனது தொலைபேசியை வலுக்கட்டாயமாக பறித்ததாகவும் அவர் பதிவிட்டுள்ளார்" என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, ''அல் பியர் வேண்டும்" என்ற கோஷம் உலக கவனத்தை ஈர்த்தது. மைதானங்களில் மதுபானத்துடன் கூடிய பியர் விற்பனை தடைசெய்யப்பட்டது.



உலகக்கிண்ணத் தொடரில் மெக்சிக்கோ அணியின் வெற்றிக்காக அந்நாட்டு ரசிகர்கள் இறைசக்தியிடம் பிரார்த்தனை செய்யும் வழக்கத்தையும் சுமார் 50 ஆண்டுகளாக கடைப்பிடித்துவரும் நிலையில், மெக்சிக்கோவிலுள்ள தேவாலயங்களில் குழந்தை இயேசுவை மக்கள் வழிபடுகின்றனர். குழந்தை இயேசு சிலைக்கு தங்கள் அணியின் ஜெர்சியை அணிவித்து ரசிகர்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

# ஆர்ஜென்ரீனாவுக்கு அதிர்ச்சி தோல்வியளித்த சவூதி அரேபியா: வெற்றிக் கொண்டாட்டத்திற்கு நேற்று தேசிய விடுமுறை!

**22ஆவது** பீபா உலகக்கிண்ண உதைபந்து தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் கட்டாரின் பல்வேறு மைதானங்களில் நடைபெற்று வருகிறது. இதில் குழு 'சி'யில் இடம்பெற்றுள்ள முன்னாள் சம்பியன் ஆர்ஜென்ரீனா – சவூதி அரேபிய அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் லூசைல் மைதானத்தில் நடைபெற்றது.

முதல் பாதி முடிவில் 1-0 என ஆர்ஜென்ரீனா முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதியில் சவூதி அரேபிய வீரர்களின் அசத்தலான ஆட்டத்தால் அந்த அணி 2-1 என அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் தொடர்ச்சியாக 36 ஆட்டங்களில் தோல்வியை சந்திக்காமல் வலம் வந்த ஆர்ஜென்ரீனாவின் வெற்றி வேட்டைக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது.



பீபா உலகக்கிண்ண வரலாற்றில் தென்னமெரிக்க நாட்டுக்கு எதிராகவும் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராகவும் சவூதி அரேபியா பெற்ற முதல் வெற்றி இதுவாகும். இதற்கு முன்னர் ஆர்ஜென்ரீனாவுக்கு எதிராக 4 முறை சவூதி அரேபியா மோதியிருந்தது. இதில் இரு தோல்விகளையும் இரு சமநிலையையும் பதிவு செய்திருந்தது.

சவூதி அரேபிய அணியின் வெற்றியை ஒட்டுமொத்த அரேபிய நாடுகளும் கொண்டாடி வருகின்றன.

இந்நிலையில், சவூதி அரேபியா வெற்றியைக் கொண்டாடும் விதமாக சவூதி மன்னர் நாடு முழுதும் நேற்று ஒருநாள் தேசிய விடுமுறை அறிவித்திருந்தார்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## இன்றைய போட்டிகள்

சுவிட்ஸர்லாந்து VS கெமரூன் (குழு-G) - மாலை 3.30

உருகுவே VS தென்கொரியா (குழு-H) - மாலை 6.30

போர்த்துக்கல் VS கானா (குழு-H) - இரவு 9.30

பிரேஸில் VS சேர்பியா (குழு-G) - நள்ளிரவு - 12.30

FIFA WORLD CUP Qatar2022

# வெளியேறிய ரொனால்டோ




**பு**கழ்பெற்ற உதைபந்து கழகமான மென்செஸ்டர் யுனைடெட் கழகத்திலிருந்து நட்சத்திர வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ வெளியேறியுள்ளதை கழக நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளது.

போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்ரியானோ ரொனால்டோ கடந்த 2003ஆம் ஆண்டு முதல் முறையாக மென்செஸ்டர் யுனைட்டெட் அணியில் விளையாடினார். பின்னர் 2009ஆம் ஆண்டு ரியல் மாட்ரிட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட ரொனால்டோ, 2018ஆம் ஆண்டு யுவெண்டஸ் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டார். மூன்று ஆண்டுகள் அந்த அணிக்காக விளையாடிய அவர், கடந்த ஆண்டு மீண்டும் மென்செஸ்டர் அணியில் இணைந்தார்.

தற்போது அணியின் பயிற்சியாளருக்கும் ரொனால்டோவுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அணியிலிருந்து ரொனால்டோ வெளியேறியுள்ளார். இதனை அணி நிர்வாகம் உறுதிப்படுத்தியுள்ளது. பரஸ்பர ஒப்பந்தத்தின் மூலம் ரொனால்டோ வெளியேறுவார் என்று மென்செஸ்டர் யுனைடெட் அறிவித்துள்ளது.

# நாடாளுமன்றில் பிள்ளையான், சாணக்கியனின் சண்டை மாவட்ட மக்களை தலைகுனிய வைத்துள்ளது

**மட்டு. தமிழ் உணர்வாளர் அமைப்பின் தலைவர் மோகன் காட்டம்!**

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் தீர்க்கப்படாத விடயங்கள் அதிகளவில் இருக்கின்றன. திட்டமிடவேண்டிய நிறைய தீர்மானங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சந்திரகாந்தன், இரா.சாணக்கியன் விவாதிக்காமல் நாடாளுமன்ற நேரத்தை வீணடித்து சின்னப்பிள்ளைத்தனமாக சண்டையிட்டு மாவட்ட மக்களை தலைகுனிய வைத்துள்ளனர் - என மட்டக்களப்பு தமிழர் உணர்வாளர் அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் கடும் கண்டனம் தெரிவித்தார்.

செங்கலடியிலுள்ள பிறிதியன் திரையரங்கு மண்டபத்தில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்ற விசேட ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சந்திரகாந்தன், இரா.சாணக்கியன் ஆகிய இருவரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை, நடந்துகொண்ட விதம் மட்டக்களப்பு மாவட்ட மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளதுடன், அவர்களை தலைகுனிய வைத்துள்ளது.

இவர்களுடைய வெற்றிக்கு கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் உணர்வாளர் அமைப்பு மிகவும் பாடுபட்டது. மாவட்டத்துக்கு 5 தமிழ் பிரதிநிதித்துவம் வரவேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க விருப்பமில்லாதவர்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு வாக்களிக்குமாறும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு வாக்களிக்க விருப்பமில்லாதவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறு கேட்டிருந்தோம். அந்தவகையில் இவர்களின் வெற்றிக்கு நாங்கள் பாடுபட்டவர்கள்.

உங்களது செயற்பாட்டினால் மக்களுக்கு



நாங்கள் பதில் சொல்லவேண்டியவர்களாக இருக்கின்றோம். எனவே, தமிழர்களாகிய நாங்கள் ஒருமித்த பாதையில் பயணிக்கவேண்டிய காலத்தின் கட்டாய தேவை இருக்கின்றது. அதனைவிடுத்து, இவ்வாறு சின்னப்பிள்ளைத்தனமாக நாடாளுமன்றத்தில் சண்டையிடுவது மாவட்ட மக்களை தலைகுனிய வைத்துள்ளது

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சந்திரகாந்தன் 44 ஏக்கரை குத்தகைக்கு பெற்றிருக்கின்றார். இதில் என்ன பிரச்சினை இருக்கின்றது? அரச காணியை யாரும் குத்தகைக்குப் பெறலாம். நாடாளுமன்ற உறப்பினராக இருக்கலாம், பாமர மக்களாக இருக்கலாம் அதில் எந்தவிதமான பிரச்சினைக்கும் இடமில்லை.

இதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கனடாவிற்கு ஆளை அனுப்பினார். கனடாவுக்கு சாணக்கியன் ஆளை அனுப்பினால் பிள்ளையானுக்கு என்ன குறை வந்துவிட்டது. எந்தப் பிரச்சினையும் இல்லை. இதனை நாடாளுமன்றத்தில் விவாதிப்பது பெரிய வெட்கக்கேடானது.

இன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏராளமான காணிகள் பல தரப்பாலும் பறிபோய்க்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் ஒருமித்து யாராவது தமிழர்கள் இந்தக் காணிகளை தக்கவைத்து கொள்ளவேண்டிய காலத்தின் கட்டாய தேவை இருக்கின்றது என்பதை சகலரும் உணர்ந்து கொள்ளுங்கள்.

எனவே, நிலத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அனைத்து தமிழர்களுக்கும் இருக்கின்றது. இதனையெல்லாம் பெரிய விடயமாக தூக்கிப்பிடிக்க வேண்டாம். அதேபோன்று சாணக்கியன் வெளிநாட்டுக்கு ஆளை அனுப்பியிருந்தால் வேறு ஏதும் செய்திருந்தால் நாடாளுமன்றத்தில் விவாதிக்கவேண்டிய விடயம் இல்லை. இதை உங்கள் வீட்டு வாசலில் மேடை அமைத்து விவாதித்துக்கொள்ளுங்கள்.

மாவட்டத்தில் எங்களுடைய தீர்க்கப்படாத விடயங்கள் அதிகளவில் இருக்கின்றன. திட்டமிடவேண்டிய நிறைய தீர்மானங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் நாடாளுமன்றத்தில் பேசாமல் நாடாளுமன்ற நேரத்தை வீணடித்து இந்த மாவட்ட மக்களின் மரியாதையை இழந்திருக்கின்றீர்கள் - என்றார்.

# 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மக்களை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கானதல்ல!

**நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்**

(கிண்ணியா நிருபர்)

ஜனாதிபதி, நாடாளுமன்றத்தில் உறுப்பினராக இருந்தபோது கூறிய எதிர்வுகூறலை போன்றே இந்த வரவு-செலவுத் திட்டத்திலும் ஏராளமான எதிர்வுகூறலை கூறியுள்ளார். ஆனால், அதற்கான தீர்வு எதையும் கூறியதாக எனக்குத் தெரியவில்லை. வரவு-செலவுத் திட்டத்தின்படி பாதுகாப்புச் செலவு மட்டும் அதிகளவில் உயர்ந்திருக்கின்றது. கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலும் பார்க்க பாதுகாப்புக்குப் பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. டொலரை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் எதுவும் இல்லை. சமர்ப்பிக்கப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் மக்களை நெருக்கடியிலிருந்து மீட்பதற்காக தீர்வாக முன்வைக்கப்படவில்லை - என்று வரவு-செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போது நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார நெருக்கடியில் மூழ்கிக் கிடக்கும் நாட்டை மீட்பதற்குச் செலவினத்தைக் குறைக்கும் ஏற்பாடு ஏதுமில்லை. பொருளாதாரத்தை சீரமைக்க என்ன செய்வோம், எப்படி செய்வோம் என விரிவாக எதையும் இதில் காணவில்லை. எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும்



வெளிநாட்டுக் கடன்களை செலுத்துவதற்கும் வருடத்திற்கு 12 ஆயிரம் பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகின்றது.

12 ஆயிரம் பில்லியன் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் எவ்வாறு பெற்றுக்கொள்ளப் போகின்றது என்பது தொடர்பில் 2023ஆம் நிதியாண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

விவசாயிகளுக்கோ, மீனவர்களுக்கோ, தொழிலாளர்களுக்கோ, அரச ஊழியர்களுக்கோ எவ்வித நன்மையும் வழங்கப்படவில்லை, விவசாயிகளுக்கான உரம் தொடர்பில் தெளிவான பதில் இல்லை, மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் மானியம் தொடர்பில் எதுவும் இல்லை. அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

மக்களை வரி என்ற பெயரில் அவர்களின் உள்ளாடைகளையும் உருவும் வரவு-செலவுத் திட்டமாகவே இது உள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து தப்பிக்க வெளிநாடு செல்ல முயற்சித்தால் கடவுச்சீட்டுக்கான கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கள் இந்த நாட்டில் வாழவும் முடியாமல் வெளிநாடுகளுக்கு செல்லவும் முடியாமல் உள்ளனர். பொருட்கள் அனைத்தின் பெறுமதியும் மூன்று முதல் ஐந்து மடங்காக உயர்ந்துள்ளது என்றார்.

உதாரணமாக, 1,500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பாதணி இப்போது 5000இற்கு விற்பனை செய்யப்படுகிறது. மக்கள் எவ்வாறு இதைத் தாங்கிக்கொள்வார்கள் என்று கேள்வி எழுப்பிய அவர், பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு திட்டமும் இல்லை எனவும் தெரிவித்தார்.

# கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட கல்முனை பஸ் நிலைய கூரை சேதமடைந்து கீழே விழும் நிலையில்!

**மாநகர முதல்வர் மறுப்பறிக்கை**

"18.7 மில்லியன் ரூபா செலவில் கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட கல்முனை பஸ் நிலையம் சேதமடைந்து கீழே விழும் நிலையில் கூரை" எனும் தலைப்பில் 2022-11-23ஆம் திகதிய 'தமிழன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும் - என்று கல்முனை மாநகர முதல்வர் செயலகம் தெரிவித்துள்ளது.



குறித்த செய்தி தொடர்பில் முதல்வர் செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள மறுப்பறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தற்போது பாவனையிலுள்ள கல்முனை பஸ் நிலைய கட்டடத்தொகுதி கடந்த 2006ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டதாகும். இந்த பஸ் நிலையக் கட்டடக் கூரையின் ஒரு பகுதி சமீபத்தில் சேதமடைந்துள்ளது. இதனை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அதேவேளை, பள்ளம் படுகுழிகளுடன் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்ட இந்த பஸ் நிலைய வளாகத்தின் தரைப்பகுதியே கடந்த வருடம் புனரமைப்பு செய்யப்பட்டிருக்கிறது. இதன்போது இப்பகுதிக்கு முழுமையாக புளக்கற்கள் பதிக்கப்பட்டு, வடிகான்கள் நிர்மாணிக்கப்பட்டதுடன், மரங்களும் நடப்பட்டு, அழகுபடுத்தப்பட்டுள்ளது.

இவை தவிர, குறித்த செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதுபோன்று மேற்படி வேலைத்திட்டத்தின்போது பஸ் நிலையம் புனரமைப்பு செய்யப்படவில்லை என்பதை 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தினதும் வாசகர்களினதும் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம் - என கல்முனை மாநகர முதல்வர் செயலகம் தெரிவித்துள்ளது.

# மோட்டார்சைக்கிள் விபத்தில் 18 வயது இளைஞன் மரணம்

**கரடியனாறில் சம்பவம்**

(எச்.எம்.எம்.பர்ஸான்)

மோட்டார்சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் மரணமடைந்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடுவாமடு எனும் பகுதியில் நேற்று முன்தினம் (22) இடம்பெற்றுள்ளது.

பாலர்சேனையிலிருந்து செங்கலடி நோக்கி பயணித்துக்கொண்டிருந்தபோது மோட்டார்சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து எதிரே வந்த சைக்கிளில் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் மோட்டார்சைக்கிளை செலுத்திச்சென்ற பவளராசா சதுஷன் எனும் 18 வயதுடைய இளைஞன் மரணமடைந்துள்ளதுடன், மோட்டார்சைக்கிளில் பயணித்த மற்றைய நபரும், சைக்கிளில் பயணம் செய்த நபரும் படுகாயங்களுடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்விபத்தில் மரணமடைந்த இளைஞனின் சடலம் செங்கலடி பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீரின் கட்டளைக்கமை வாக பிரேத பரிசோதனைக்காக கரடியனாறு பொலிஸார் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்றுள்ளனர்.


இவ்விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மருதமுனை நகரத்தை இணைக்கும் நவியான் குளத்தை ஊடறுத்துச் செல்லும் வீதி புனரமைப்பு







(பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட மருதமுனை பிரதான நகரத்தை இணைக்கின்ற நவியான் குளப்பகுதியை ஊடறுத்துச் செல்கின்ற வீதி தற்போது துரிதமாக புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படாமல் குறித்த வீதியால் அப்பகுதியில் வாழும் சுமார் 80 குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.


இந்நிலையில், நேற்று முன்தினம் (22) அதன் முதற்கட்ட பணிகள் நிறைவுறும் நிலையில் காணப்படுவதுடன், மக்களும் இலகுவாக தங்களது போக்குவரத்துகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்குறித்த இவ்வீதியின் புனரமைப்பு வேலைத்திட்டங்களை அப்பகுதியில் வசிக்கின்ற பெண்கள் சிலர் சுயாதீனமாக இணைந்து அமைப்பொன்றை உருவாக்கி வீதியின் புனரமைப்பிற்காக அப்பகுதி தனவந்தர்கள், வர்த்தக நிலையங்களில் நிதியை சேகரித்து இந்நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

மேலும், குறித்த வீதியின் புனரமைப்பை இலகுபடுத்தும் நோக்குடன் கனரகவாகனம், உழவு இயந்திரங்களின் உதவி தனியாரிடமிருந்து நாள் வாடகை அடிப்படையில் பெற்று செப்பனிடப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். இச்செயற்பாட்டை ஊக்கப்படுத்தும் முயற்சியில் குறித்த வீதிக்கான புனரமைப்புக்கு தனது தனிப்பட்ட நிதிப்பங்களிப்பினையும் வழங்கி கல்முனை மாநகர சபை உறுப்பினரும் பிரபல தொழிலதிபருமான எம்.எஸ்.எம்.நவாஸ் ஒருங்கிணைப்பு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

மருதமுனை பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தினால் வீடு வாசல்களை இழந்து பாதிக்கப்பட்ட சுமார் 80 குடும்பங்களுக்காக இவ்வீதி துரிதமாக புனரமைக்கப்பட்டு வருவதுடன், நீண்டகாலமாக மழை வெள்ளத்தினால் வெகுவாக பாதிக்கப்பட்டு, பள்ளம் படுகுழிகளுடன் மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது. இன்று இவ்வீதியை புனரமைப்பு செய்யும் வேலைத்திட்டத்தை குறுகிய காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பெண்கள் அமைப்பு மற்றும் மாநகர சபை உறுப்பினருக்கு பொதுமக்கள் இதன்போது நன்றியும் பாராட்டும் தெரிவித்துக்கொண்டனர்.

## போடியார் புலம்பல்!




**ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆட்சியில் தமிழர்கள் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு: சஜித் தெரிவிப்பு.**


**இப்படி ஒரு செய்தியை பார்த்தேன்!**

**இது கிழவி புள்ளப்பெத்த கத மாதிரி எலுவா இருக்கு..?**

**சஜீத் அம்மாச்சி ஆட்சியமைக்கப் போறதும் இல்ல.. தமிழ்மக்களிட பிரச்சின தீரப்போறதும் இல்ல.. நரி சொல்லுது தமிழ்க் கட்சிகள் எல்லாப்பேரும் சேர்ந்து வந்தா 75ஆவது சுதந்திர தினத்துக்கு முந்தி தீர்வாம்.. இது நடக்காது. இருந்து பாருங்கவன்..**

# கல்முனையில் முயற்சியாண்மை வர்த்தகக் கண்காட்சி





(எம்.என்.எம்.அப்ராஸ், சர்ஜுன் லாபீர்)


இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் "சுயமாக முன்னேற முனையும் மனிதர்கள்" எனும் நோக்கினை அடிப்படையாகக்கொண்டு அம்பாறை மாவட்டம் முழுவதும் சிறுதொழில் முயற்சியாளர்களின் திகாமடுல்ல முயற்சியாண்மை வர்த்தக கண்காட்சி கல்முனை பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் நேற்று (23) நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் வி.ஜெகதீசன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

மேலும் கௌரவ அதிதிகளாக கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திக, கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் அதிகாரி என்.ஆர்.ரம்சீன் பக்கீர், அம்பாறை மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஐ.எம்.நாசர், கல்முனை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், பிரதேச செயலக அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர் கே.எல்.யாசீன் பாவா, மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எல்.எம்.பாரூக், சிறுதொழில் முயற்சியாண்மை பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எச்.எல்.ஏ.ஜலீல், டி.லாவனியா, கே.நிரோஜினி உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணிக் கச்சேரி





(மாளிகைக்காடு நிருபர்)

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் மிக நீண்டகாலமாக இருந்துவரும் காணி அனுமதிப்பத்திரப் பிரச்சினைகளுக்கு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷானின் (நளீமி) வழிகாட்டலில் துரிதகதியில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல் மற்றும் அவை தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்தொடரில், இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட, இறக்காமம்-04, வரிப்பத்தான்சேனை-02 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்திருந்தனர்.

இவ்வாறு விண்ணப்பித்தவர்களுக்கான காணி, காணி உத்தியோகத்தர் என்.எல்.எம்.மாஹிரின் தலைமையில் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. காணிப் பிரிவு உத்தியோகத்தர்களான குடியேற்றவியல் உத்தியோகத்தர் ஜி.பி.என்.சுரஞ்சி ஸ்ரீதாச, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை.எம்.சில்மி மற்றும் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர்களான ஏ.சி.எம்.சமீர், எம்.எல்.கிஷோர் ஜஹான் ஆகியோர் கலந்து கொண்டு குறித்த பொதுமக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டன.



பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 97ஆவது அவதார தினத்தை முன்னிட்டு காரைதீவு சாயி நிலையத்தில் நேற்று (23) அதிகாலை விசேட பூசை இடம்பெறுவதையும் காரைதீவு தேரோடும் வீதி வழியாக சத்தியசாயி பாபாவின் திருவுருவப்படத்துடன் சுவாமி ஊர்வலம் வருவதையும் வீதியில் நிறைகுடம் வைத்து பக்தர்கள் நிற்பதனையும் அவர்கள் கலந்துகொண்டதையும் படங்களில் காணலாம். (காரைதீவு நிருபர்)

# உலக செய்திகள்



# தூண்டிலில் சிக்கிய 'கோல்ட்பிஷ்'

பிரிட்டனைச் சேர்ந்த மீனவரொருவரின் தூண்டிலில் 30 கிலோ எடையுடைய இராட்சத 'கோல்ட்பிஷ்' எனப்படும் தங்கநிற மீன் சிக்கியுள்ளது. கெண்டை மீனுக்கும், அலங்கார கொய் மீனுக்கும் ஏற்பட்ட கலப்பால் உருவான இந்த மீன் 'கெரட்' என அழைக்கப்படுகிறது.

பிரான்ஸின் ஷாம்பெய்ன் பிராந்தியத்திலுள்ள மீன்பிடி ஏரியில், பிரித்தானியாவைச் சேர்ந்த ஆண்டி ஹாகெட் என்ற மீனவர் இட்ட தூண்டிலிலேயே இந்த இராட்சத மீன் சிக்கியுள்ளது.

தூண்டிலை கவ்வியபடியே சுமார் 100 அடி தூரம் சென்ற மீனை, 25 நிமிடங்கள் போராடி ஹாகெட் பிடித்துள்ளார். 30 கிலோ மீனுடன் போஸ் கொடுத்தபின் அதனை ஏரியில் அவர் விட்டுவிட்டார்.



# துருக்கியில் 6.1 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## அதிர்ந்தன சைப்ரஸ் - பிரிட்டன் - கிரீஸ் - உக்ரைன்

துருக்கியில் நேற்று அதிகாலை 6.1 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. துருக்கியை உலுக்கிய நிலநடுக்கத்தின் அதிர்வுகள் சைப்ரஸ், பிரித்தானியா, கிரீஸ் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளில் உணரப்பட்டுள்ளது.

துருக்கி தலைநகர் அங்கராவில் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 4.08 மணியளவில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டதாகவும், ரிச்டர் அளவில் 6.1ஆகப் பதிவாகியுள்ளதாகவும் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு 35 முறை தொடர் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதும் பதிவாகியுள்ளது. இதன்போது கட்டடங்கள் குலுங்கியதில் பீதியடைந்த மக்கள் வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர். இந்த நிலநடுக்கத்தால் 22இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனினும், உயிர்ச் சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட்டதாக உடனடி தகவல் வெளியாகவில்லை.

முன்னதாக, இந்தோனேஷியாவில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 268ஆக அதிகரித்துள்ளது.

மேற்கு ஜாவா மாகாணத்தில் சியாஞ்சூர் நகரில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிச்டர் அளவில் 5.6 அலகுகளாக பதிவானது.

பூமிக்கு 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகளால் நகரமே குலுங்கி, ஏராளமான கட்டடங்கள் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகியுள்ளன.

மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில், இடிபாடுகளில் சிக்கி ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும், காணாமல் போன 151 பேரைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவோரில் பலரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாவும், மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில், கட்டட இடிபாடுகளில் இருந்து சடலங்கள் மீட்கப்பட்டு வருவதாலும் மேலும், உயிரிழந் தோரின் எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும், கடந்த செவ்வாய்க்கிழமை சொலமன் தீவுகள் பகுதியில் 7.0 ரிச்டர் நிலநடுக்கத்தால் அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் சீனாவை மிரட்டும் கொரோனா

## தொடர் மரணங்கள் பதிவு

## கலக்கத்தில் உலக நாடுகள்



சீனாவில், ஆறு மாதங்களுக்குப் பின் மீண்டும் கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ள நிலையில், அந்நாட்டில் பல்வேறு கட்டுப்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

தலைநகர் பெய்ஜிங்கில் முதன்முறையாக ஒரே நாளில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு பாதிப்பு உறுதியாகியுள்ள நிலையில், இதுவரை ஐவர் உயிரிழந்துள்ளனர்.

போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டு, பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியில் வரவேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சீனா, மிகக்கடுமையான கட்டுப்பாடுகளை அமுல்படுத்தி பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளை ஒட்டுமொத்தமாக முடக்கி வருகிறது. இதனால், தொழில் நடவடிக்கைகளும் அங்கு முடங்கியுள்ளன.

# ஒவ்வொரு 11 நிமிடங்களுக்குள்ளும் ஒரு பெண் கொல்லப்படுகிறார்

## ஐ.நா. பொதுச்செயலாளர் கவலை

**நவம்பர் 25 - பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம்**

ஒவ்வொரு 11 நிமிடங்களுக்குள்ளும், ஒரு பெண் அல்லது சிறுமி அவரது வாழ்க்கைத் துணையால் அல்லது குடும்ப உறுப்பினரால் கொல்லப்படுகிறார். பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறை உலகின் மிகப்பெரிய மனித உரிமை மீறலாக மாறி வருகின்றது என ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25ஆம் திகதி திகதி 'பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம்' கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு இத்தினம் நாளை வெள்ளிக்கிழமை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இந்நிலையில் இது குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் (António Guterres) தெரிவிக்கையில்,

'ஒவ்வொரு 11 நிமிடங்களுக்குள்ளும், ஒரு பெண் அல்லது சிறுமி அவரது வாழ்க்கைத் துணையால் அல்லது குடும்ப உறுப்பினரால் கொல்லப்படுகிறார்.

உலகளவில், 15 முதல் 49 வயதுடைய 10 பெண்கள் மற்றும் சிறுமிகளில் ஒருவர், அவர்களின் உறவுகள் அல்லது வெளிநபர்களால் உடல் ரீதியான துன்புறுத்தலுக்குள்ளாகி வருகின்றனர் என்று அறிக்கை காட்டுகிறது. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையானது, உலகின் மிகப்பெரிய மனித உரிமை மீறலாக மாறி வருகிறது. எதிர்வரும் 2026ஆம் ஆண்டுக்குள் பெண்கள் உரிமை அமைப்புகள் மற்றும் இயக்கங்களுக்கான நிதியை 50 சதவீதம் அதிகரிக்க வேண்டும்.

பெண்களும் சிறுமிகளும் வெறுக்கத்தக்க வார்த்தைகள், பாலியல் துன்புறுத்தல், ஆபாசப் புகைப்படங்கள் போன்ற பல வகைகளில் நிகழ்நிலை (online) வன்முறையை எதிர்கொள்கின்றனர். பாலினப் பாகுபாடு, வன்முறை மற்றும் துஷ்பிரயோகத்தால் உலகின் அரைவாசிப் பேர் பெரும் விலையை கொடுக்கிறார்கள். வாழ்க்கையின் அனைத்துத்துறைகளிலும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் பங்கேற்புள்ளது. அப்படியிருந்தும் அவர்களுக்கான அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பறிக்கப்படுகின்றன - என்றார்.



# என்ன கொடுமை இது!



திருமணமேடைக்கு வித்தியாசமான முறையில் மணமக்களை அழைத்து வருவதில் இன்றைய தலைமுறையினர் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால், இந்த விடயத்தில் இவர்கள் ரொம்பவே எல்லை மீறி விட்டனர். வித்தியாசம் என்ற பெயரில், மணமகனை அவரது நண்பர்கள் சவப்பெட்டியில் வைத்து மணமேடைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இதை காணொளியில் எடுத்து டிக்டொக்கில் பதிவிட்டு, "லைக் பண்ணுங்க, ஷேர் பண்ணுங்க, சப்ஸ்கிரைப் பண்ணுங்க" என்றும் விளம்பரம் தேடியுள்ளனர். இதைப் பார்த்து கொதித்துப் போன பலரும், "இப்படிப்பட்ட நபருடன் வாழாதீங்க, டைவர்ஸ் பண்ணிடுங்க" என கமெண்ட் போட்டு வறுத்தெடுத்துள்ளனர். இச்சம்பவம் எந்த நாட்டில் நடந்தது உள்ளிட்ட தகவல்கள் வெளியாகவில்லை.

# புதிய விசா விதிகளை அறிவித்த ஐக்கிய அரபு இராச்சியம்



ஐக்கிய அரபு இராச்சியம் புதிய விசா விதிகளை அறிவித்துள்ளது. புதிய விதிகளின்படி, பயணியொருவர் தனது முதற்பெயர் மற்றும் குடும்பப்பெயர் இரண்டையும் தனது கடவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

கடவுச்சீட்டில் முதற்பெயர் மற்றும் குடும்பப்பெயர் குறிப்பிடப்படாத பயணிகள் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையான குடியிருப்பு அனுமதி அல்லது வேலைக்கான விசா வைத்திருப்பவர்களுக்கு இந்த விதி பொருந்தாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிரீஸ் கடற்பகுதியில் தத்தளித்த புலம்பெயர்ந்தோர் மீட்பு



கிரீஸ் கடற்பகுதியில் மீன்பிடிப் படகுகளில் தத்தளித்துக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கான புலம்பெயர்ந்தவர்களை அந்நாட்டு கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர். கிரீஸின் கிரீட் தீவில் பலத்த காற்றில் சிக்கி இரண்டு படகுகள் தத்தளித்துக்கொண்டிருந்தன. இதனையடுத்து அங்கு விரைந்த கிரீஸ் கடற்படையினர் படகுகளிலிருந்த 400இற்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்தவர்களை மீட்டனர்.

அவர்கள் லிபியாவிலிருந்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்டவர்கள் கிரீஸின் தெற்குக் கடலோர நகரமான பேலியோச்சோராவிற்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7